★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 1 ஷவ்வா 6 இதழ் 156

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17—7—83

# கூட்டணி தலைமையகத்தில் இராணுவத்தினர் சோதனை!

[யாழ்ப்பாணம்]

நல்லூரிலுள்ள தமிழர் விடுதலை கூட்டணி தற்காலிக தலைமையகத்தை நேற்றுக்காலை இராணுவத்தினர் திடீர் முற்றுகையிட்டு பலத்தசோதனையிட்டனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் காரியாலயத்திற்குள் சென்ற இராணுவத்தினர் காரியாலய கூரை சிலிங்கை தட்டிப்பார்த்ததுடன் அறைகளையும் சோதனையிட்டனர்.

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தின் காரியாலயத்துக்குள் சென்ற ஆயுதப்படையினர் அவருடைய மேசை லாச்சிகள் தஸ்தாவேஜுகள் அடங்கிய சூட்கேசையும் சோதனையிட்டனர்.

கூட்டணி காரியாலயத்திற்கு அச்சமயம் அலுவலாக வந்த இரு பல்கலைக்கழக மாணவர்களையும் இராணுவத்தினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். கூட்டணி காரியாலயத்திலிருந்த நாகேந்திரம், நித்தியானந்தன் ஆகியோரையும் இராணுவத்தினர்

(12-ம் பக்கம் பார்க்க)

# தமிழரின் முழுப் பிரச்னைக்கும் தீர்வுகாண முயற்சி எடுக்காத மகாநாட்டில் கூட்டணி கலந்து கொள்ளாது!

## ஜனாதிபதிக்கு 'அமிர்' அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் முழுப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண முயற்சி எடுக்கப்படாத ஒரு மகாநாட்டில், தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்ளமாட்டாது என்ற கூட்டணி பாராளுமன்றக் குழுவின் முடிவை அதன் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு நேற்று அறிவித்தார்.

யாழ். மாவட்டத் தொகுதிகளில் பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி, ஆகியோர் கூட்டத்துக்கு வர முடியாதிருப்பதாகவும், எடுக்கிற முடிவை ஏற்றுக்கொள்வதென்றும் அறிவித்தனர். சாவ

(12-ம் பக்கம் பார்க்க)

# "ஐ. தே. க. வின் கீழ்தான் யாழ்ப்பாணம் இயங்குகிறது"

## ஜனாதிபதி ஜே. ஆர். வலியுறுத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று மாலை மருதானை பௌத்த விகாரையில் நடந்த வைபவமொன்றில் வலியுறுத்தினார்.

அவ்வைபவத்தில் அவர்

(12ம் பக்கம் பார்க்க)

# கூட்டணித்தலைவர் 'சிவா' சோதனையிடப்பட்டார்!

(கோண்டாவில்)

தமிழர் விடுதலை கூட்டணி தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் நேற்று காலை கோண்டாவிலில் மூன்று தடவைகள் இராணுவத்தினரால் மறித்து சோதனையிடப்பட்டார்.

தான் நல்லூர் எம்.பி, என்று அவர் கூறிய போதும் ''சபாநாயகரின் கடிதம் தேவை'', என்று இராணுவத்தினர் கேட்டார்களாம்.

கோண்டாவில் மேற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை தரமுயர்த்தப்பட்டது தொடர்பாக நடந்த விழாவில் கலந்து கொள்ளச் சென்ற போதே நல்லூர் எம். பி. இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டார்.

அவ்விழாவில் பேசிய நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இவ்விழாவிற்கு வரும் போது இடங்களில் இராணுவத்தினர் மறித்து சோதனையிடப்பட்டதாகவும் நான் நல்லூர் எம். பி. என்று கூறிய போது சபாநாயகரின் கடிதம்வேண்டுமென இராணு

(12-ம் பக்கம் பார்க்க)

# இளைஞர் சுடப்பட்ட இடத்தில் யந்திரத்துப்பாக்கி, சீருடைகள்

## குருநகர் முகாம் பொறுப்பதிகாரி தகவல்

(யாழ்ப்யாணம்)

அல்லாரையில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் இரு இளைஞர்கள் சுடப்பட்ட இடத்தில் இரு உப யந்திரத் துப்பாக்கிகள், பதினெட்டு கைக்குண்டுகள், ஆயிரத்து ஐந்நூறு சுற்றுகள் கொண்ட வெடிமருந்துகள், எட்டுச்சோடி இராணுவ சீருடை பாணியிலான உடைகள் கைப்பற்றப்பட்டதாக குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சி. குலதுங்கா தெரிவித்தார்.

இச்சூட்டுச்சம்பவம் தொடர்பாக அவருடன் 'ஈழநாடு' தொடர்புகொண்ட போதே மேஜர் குலதுங்கா இவற்றை வெளியிட்டார்.

மேஜர் துலத்துங்கா இது பற்றி மேலும் தெரிவித்தாவது:

''பயங்கரவாதிகள் சிலரின் நடமாட்டம் மேற்படி சம்பவம் இடம்பெற்ற இடத்தில் காணப்படுவதாக எமக்கு தகவலொன்று கிடைத்தது. இதனைத்தொடர்ந்து எமது குருநகர் முகாமிலிருந்து இரா

(12-ம் பக்கம் பார்க்க)

# நேற்று இப்பகுதியில் சோதனை

(கோண்டாவில்)

இராணுவத்தினர் திருநெல்வேலி குடியேற்றத் திட்டப் பகுதியில் நேற்று சோதனையை மேற்கொண்டனர்; அதிகாலையில் இருந்தே இராசபாத வீதி, ஆடியபாதம் வீதி,

(12-ம் பக்கம் பார்க்க)

# யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் சடலங்கள்!

## அடையாளம் காணப்படவில்லை!!

(யாழ்ப்பாணம்)

அல்லாரையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இனந்தெரியாத இரு இளைஞர்களின் சடலங்களும் நேற்று முன்தினமிரவு 11-20 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் பாதுகாப்புடன் சாவகச்சேரிப்பொலிசார் இரு சடலங்களையும் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து வைத்தனர்.

ஒரு இளைஞரின் சடலத்தில் நீல நிற உள்ளங்கியுடன் பச்சைநிற சேட் திறந்தநிலையில் வெள்ளை பெனியனும் அணிந்திருக்கக் காணப்பட்டது. தலையில் பெரிய துப்பாக்கிச்சூட்டுக்காயம். அது பின்புறத்திலும் இருந்தது. நெஞ்சின் இடதுபக்கம், வயிறு வலதுபக்கம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள். வலது கண்

(12-ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையிலும் ஜீப் தீக்கிரை!

(புலோலி)

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டி எரிந்து நாசமாக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உள்ள இவ்வலுவலகத்தின் கராஜில் நின்ற ஜீப்வண்டி தீக்கிரையாக்கப்பட்டதினால் அலுவலகக் கட்டிடமும் சிறிது பாதிப்படைந்துள்ளது. இரவு 2மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. சம்பவம் நடைபெற்றபோது 'றிசர்வ்'

(12-ம் பக்கம் பார்க்க)

# 'ரத்தக்கறை'க் கார் பொலிஸ் பாதுகாப்பில்!

(யாழ்ப்பாணம்)

மீசாலையிலுள்ள அல்லாரைப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்வபத்தின்போது தப்பிச் சென்றவர் ஏ-40 கார் (சி. என். 9198) ஒன்றைக் கடத்தி அதில் சென்றவாகவும், அக்கார் கந்தர்மடத்தில் பழுதடையவே, அவ்வழியால் வந்த மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றித்தப்பிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

காரின் உட்பகுதியில் இரத்தக்கறை காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இக்கார் தற்பொழுது யாழ். பொலிசில் பாதுகாப்பில் உள்ளது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ். பொலிசில் புகார் செய்துள்ளார்.

கலா
புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.

7684

சிறியோர்கள்
பெரியோர்கள்
பெண்களுக்கு
பொழுதுபோக்கிற்கு
T. V. GAMES
ரி. வி. கேம்ஸ்
20 விளையாட்டுக்கள் - முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரி. வி. திடல்
1-00, -/50, -/25 சதம் மட்டுமே
நியுவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
23, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகே 23 பரப்பு நெற் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு.செந்தில்நாதன், தபாற் கந்தோர் ஒழுங்கை, அராலி தெற்கு. 7984

---

குடியிருக்க வசதியானதும், பாடசாலை, மின் வசதியுள்ளதுமான 8 பரப்புக் காணி மட்டுவில் தெற்கில் நுணுவில் பருத்தித்துறை செல்லும் வீதிக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- செ. குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 7929

---

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள தெங்கு பனம்பொருள் கூட்டுத்தாபனக் கந்தோருக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் 2-வது காணியாக சகல வசதிகளுடன் 6 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: Mr. மாணிக்கசுந்தரம், குமரகோட்டம், நீதிமன்ற வீதி, மல்லாகம். 7920

---

பரந்தன் D, ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் 7 ஏக்கர் நெற்காணி இரு போகம் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி, ஜே. பி. யூ. எம். 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி:262. 7963

---

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணி வீதி 98ம் இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடு கட்டுவதற்குரிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு நேரில் வரவும். 7970

---

மீசாலை பழைய ஸ்ரேசனுக்கு அருகாமையில் 7 பரப்புக்காணி உடன்விற்பனைக்குண்டு. வைத்தியசாலை அமைக்கவோ அல்லது தொழிற்சாலை போடவோ அல்லது வீடுகள் கட்டவோ சிறந்த காணி. தொடர்பு:- வா. வீரவாகு, சாவகச்சேரி வடக்கு, மீசாலை. 7992

---

நல்ல நிலைமையில் வேலை செய்துகொண்டிருக்கும் பெரிய எலக்ரோலக்ஸ் (Elecrolux) குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கிருக்கின்றது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:7944, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7944

---

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நல்ல நிலையிலுள்ள பழைய கட்டுத்தேர் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகசபை. 7946

---

அஸ்டின் 40 பரீனு மொடல் 4 ஸ்ரீ தொடர் இலக்கத்தை உடையதும் ஒரு கலன் பெற்ரோலுக்கு 45 மைல் ஓடக்கூடியதுமான கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. A. பரமானந்தம், 333, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7996

---

Volkswagen 1300 9 ஸ்ரீ நல்லநிலையில்விற்பனைக்குண்டு. 834, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Phone 22029. 7995

## விற்பனைக்கு

சொந்தப்பாவனையில் உள்ள (லான்சர் S. L. மொடல்) கார் விற்பனைக்கு உண்டு. 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T. P. 22420. (8001)

---

காரைநகர் நீலன்காட்டில் ஆறுபரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. ஆ. க.கனகசபாபதி சன்ஸ், 106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7976

---

Concrete Bricks எஞ்சிய ஐந்து அங்குலஅகலமான கொங்கிறீற் கற்கள் (விலை: ரூ. 4/-) (800) விற்பனைக்குண்டு. 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7997

---

நல்லூரில் பருத்தித்துறை வீதியிலிருந்து நாற்பது யார் தொலைவில் குமார வீதியில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 1 . 56 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: கனகமனோகரன், சட்டத்தரணி, வல்வெட்டித்துறை. 8002

---

சாவகச்சேரி சந்தைக்குக் கிட்ட மெயின்ரேட்டு அருகில் 1 பரப்புக்காணி விற்பனவுக்குண்டு. இரும்புத்தொழில், வாகனதிருத்தம், மரக்காலை போன்ற வியாபாரதேவைக்கு உகந்தது. தொடர்பு: சி. வீரகத்தி, சதா தேநீர்க்கடை, கோட்டடி, சாவகச்சேரி. 7980

---

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதியில் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. தம்பிஐயா, சோதிடவிலாச புத்தகசாலை, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். 8006

## தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பிரபல மருந்துச்சாலை ஒன்றில் விற்பனையாளர்களாக வேலை செய்வதற்கு மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்பிள்ளைகள் தேவை. 25-7-83க்கு முன்பு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8004, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8004

---

யாழ்ப்பாணம், மானிப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், திருநெல்வேலி பகுதியில் வீடு கட்டக்கூடிய காணி தேவை. மூன்று பரப்பளவில் இருக்கவேண்டும். முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7964, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (7964)

---

கைத்தொழில் நிறுவனம் ஒன்றிற்கு உதவி மேற்பார்வையாளராகக் கடமைபுரிவதற்கு A/L சித்தியடைந்த பெண்கள் தேவை. வி. மு. திகதி: 21-07-83 இற்குள் விண்ணப்பிக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி: விளம்பர இல: 7986, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 7986

## வகுப்புகள்

பட்டதாரி ஆசிரியரினுல் க. பொ. த. (உ. த.) மாணவர்கட்கு தனிப்பட்ட முறையில் தூய, பிரயோக கணிதம் கற்றுக்கொடுக்கப்படும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருப்பின் விரும்பத்தக்கது. விளம்பர இல: 8005, மே / பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8005

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 274ம் இலக்கத்தில் உள்ள சி. எஸ். கே. கட்டடத்தில் (C.S.K.) உள்ள புதிய கடை ஒன்று வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு:- முகாமையாளர் சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7943

---

இலக்கம் 133, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாகக்கட்டப்பட்டிருக்கும் / கட்டப்படவிருக்கும் கடைகள் வாடகைக்குத் தேவைப்படுவோர் உடனடியாகப் பதிவு பதிவுசெய்து கொள்ளவும். விபரங்களுக்குமுகாமையாளர், சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7942

# விளம்பரம்

## வெற்றுப் பொருள் விற்பனை

எமது சங்கத்தில் 50 வெற்று ஓயில் றம் கேள்விப் பத்திர மூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் 1/- செலுத்திப் பெற்ற விண்ணப்பப் படிவங்களில் முத்திரையிடப்பட்ட உறைகளில்வைத்து 22-7-83 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கடிதஉறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் ''வெற்று ஓயில் றம்மிற்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடவும்.

கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா 100/- (நூறு) ஆகும்.

**பொது முகாமையாளர்**
அளவெட்டி மல்லாகம்
பல நோக்குக் கூ. சங்கம்

7981

---

**புங்குடுதீவு - நயினாதீவு**
**பல.நோ.கூ.சங்கம்**

புங்குடுதீவு
13-7-83

## விற்பனை

எம்மிடம் கீழ்த்தரப்பட்டுள்ள பொருட்கள் கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்ய இருக்கின்றது. விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்று 30-7-83ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என விலாசமிடப்பட்டு அனுப்புதல்வேண்டும்.

என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொருட்களின் விபரம்:**

1. பாவித்த வெற்று பரல்கள்
2. கழிவுப் பொருட்கள்
3. சுவீப்பிங் மா
4. சுவீப்பிங் சீனி
5. பாவிக்கப்பட்ட மரங்கள்
6. பாவிக்கப்பட்ட லொறி ரயர்
7. பாவிக்கப்பட்ட லொறி ரியூப்
8. பாவிக்கப்பட்ட லொறி உதிரிப்பாகங்கள்
9. பீடி பெட்டிகள்

**பொதுமுகாமையாளர்**
புங். - நயி. பல. நோ. கூ.
சங்கம்,
புங்குடுதீவு.

7999

---

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தில் ஒரு இரண்டு மாடிக் கட்டிடத்தைப்பூர்த்திசெய்து கொடுப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டிட வரை படங்களைப் பார்வையிடவும், கேள்விப்பத்திர விபரங்களைப்பெறவும் நிறுவன கந்தோரில் தொடர்பு கொள்ளவும்.

**முடிவு திகதி:- 30-07-83**

**இயக்குநர்**
யாழ்ப்பாணக் கல்லூரி
தொழில் நுட்ப நிறுவனம்
வட்டுக்கோட்டை.

7998

---

**யாழ்நகரில்**
பலவகைப்
**பரிசுப் பொருட்கள்**



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு

**பிரவுண்சன்**
**ரேட் சென்ரர்**
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

---

## தற்கொலை

(கிளிநொச்சி)

தான் வளர்த்துவந்த காளை மாடு காணமல் போய்விட்டதனுல் மனமுடைந்து காணப்பட்ட ஐந்து பிள்ளைகளின் தந்

(11-ம்பக்கம் பார்க்க)

---

## பெண் நெசவாளர் தேவை

மின்தறியில் அல்லது கைத்தறியில் அனுபவம் உள்ளவர்களுக்கு எமது தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு உண்டு. தகமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**25-7-83 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.**

**சீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்டற்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

7987

---

## 31-ம் நாள் நினைவு தினம்

### செல்வி லோஜினி காராளசிங்கம்

சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.

**உதயம்: 19-1-82 அஸ்தமனம்: 17-6-83**

எம்மை எல்லாம்ஆருத்துயரில் ஆழ்த்திமீளாத்துயில் கொண்ட அன்புச்செல்வமே லோஜினி எங்களுடன் வாழ்ந்த சொற்பகாலம் எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் எம்மை விட்டகலாதம்மா. உன் புனித ஆத்மா சாந்தியடைந்து இறைவன் பாதமடைய கண்ணீர்நிறைந்தகண்களுடன் ஆண்டவனைப்பிரார்த்திக்கும்

**அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா,**
**மாமாமார், பெரியம்மா, சித்தி,**
**சீலன் அண்ணு,**
**மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.**

(7960)

---

மக்கள் போராட்ட வரலாற்றின்

## லெனினது பகுப்பாய்வு

இன்றைய பாரிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும்
மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கு வழி காணவும்
மக்களின் கடந்த கால வரலாற்றினை ஆராய்ந்து
அறிவது அவசியமாகும்.
முன்னைய சந்ததியினரின் சமூக அனுபவங்களை
பகுப்பாய்வது முக்கியமானதாகும்.
**தேசிய விடுதலை, சமாதானம், சமதர்மம்**
ஆகியவற்றிற்காக மக்களின் வாழ்வில் ஏற்பட்ட
போராட்டங்களை இவ்வாறு
**லெனின் பகுப்பாய்ந்திருக்கிறார்.**
இவ் ஆய்வு பற்றி அறிய
**இலங்கை மார்க்ஸிய இயக்கத்தின் முன்னோடிகளில்**
**ஒருவரும் பழுத்த அனுபவம் வாய்ந்தவருமான**
**தோழர் த. துரைசிங்கம்**
எழுதிய
**''லெனினும் ஆசியாவும்''**
என்ற நூலைப் படியுங்கள்.
இந்நூல் புத்தகசாலைகளில் கிடைக்கும்.
விலை ரூபா 10/-

**சோஷலிஸ ஆய்வுக்கழகம்,**
31, வில்சன் வீதி, கொழும்பு 12

(8000)

# பஞ்சாப்பில் மோட்டார் சைக்கிள்கள் தடை!

## தீவிரவாதிகளை முறியடிக்க அரசு நடவடிக்கை

**சண்டிகார் ஜூலை 16**

**பஞ்சாப் மாநிலத்தில் மோட்டார் சைக்கிள்கள் தடை செய்யப் பட்டுள்ளன. தீவிரவாதிகள் மோட்டார் சைக்கிள்களில் சென்று குற்றச் செயல்களைப் புரிவதையடுத்தே இத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுலிருந்து இத்தடை அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்னர் இருவர் மோட்டார் சைக்கிளில் பயணஞ் செய்யவும் தடை போடப்பட்டிருந்தது.

பஞ்சாப் மாநிலத்தில் இதுவரை நடைபெற்ற கொலைச் சம்பவங்களில் அநேகமானவை மோட்டார் சைக்கிள்களில் வந்த தீவிரவாத இளைஞர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னாள் இந்திய ஹாக்கி வீரர் ஒருவர் பல்கலைக்கழகமொன்றின்வளவினுள் வைத்து கொலைசெய்யப்பட்டது உட்பட சில கொலைச்சம்பவங்கள் மோட்டார் சைக்கிளில் வந்த கொலைஞர்களாலேயே மேற்கொள்ளப்பட்டனவென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பஞ்சாப் தீவிரவாதிகளான அகாலிகளிடம் அவர்களது பிரிவினைக்கொள்கையைக்கைவிடும்படி பலர் கேட்டு வருகின்றனர். நேற்று அகாலிகள் தமது நடவடிக்கைகள் குறித்து நான்கு மணி நேரம் ஆலோசனைகள் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## தமிழகத்தில் செயற்கை மழைப் பொழிவு வெற்றி!

சென்னை ஜூலை 16

சென்னையில் நேற்று பூண்டி நீர்த்தேக்கப்பகுதியில் செயற்கைமழை வெற்றிகரமாக பெய்விக்கப்பட்டது. அமெரிக்க செயற்கை மழை நிபுணரான பாமஸ் ஹென்டர்சன் தலைமையிலான குழுவினர் இச் செயற்கை மழைப் பொழிவு நடவடிக்கைளில் நேற்று இறங்கியிருந்தனர்.

விமானத்தில் சென்ற இக் குழுவினர் எழுபது நிமிடங்கள் வரை முகில் கூட்டங்களை தமது நடவடிக்கைகளுக்காக ஒன்று சேர்ப்பதில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் 'சில்வர் அயோடிக்' என்ற செயற்கை மழை பொழியச் செய்யும் வர்த்திகளை கொளுத்தி அம்முகில் கூட்டங்களுடன் அவற்றைக்கலந்தனர், சுமார் ஆறு சில்வர் அயோடிக் வர்த்திகள் கொளுத்தப்பட்டன.

இதனையடுத்து எட்டு நிமிடங்கள் வரை மழைப்பொழிவு இடம்பெற்றது. இச் செயற்கைமழைப் பொழிவு நடவடிக்கை சுமார் ஆறுயிரம் அடி உயரத்தில் இடம்பெற்றது. (கி)

## பாரிஸ் விமானநிலையத்தில் குண்டு வெடிப்பு!

### 5 பேர் பலி; 50 பேர் காயம்!

பாரிஸ் ஜூலை 16

பாரிஸிலுள்ள ஓலே விமான நிலையத்தில் நேற்று திடீரென குண்டுவெடிப்பொன்று நிகழ்ந்தது. இதனால் ஐந்து பயணிகள் பலியானார்கள். ஐம்பது பேர்காயமடைந்தனர்.

இந்த விமான நிலையத்தில் துருக்கி செல்வதற்கான பயணிகள் நின்றிருந்த கட்டிடத்திலேயே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இக்கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த மூடையொன்றிலிருந்து அக்குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

துருக்கியின் இன்ஸ்டன்புல் நகர் நோக்கிப் பயணமாகவே இக்கட்டிடத்தில் பயணிகள் நின்றிருந்தனர். குண்டு வெடிப்பு நிகழ்ந்தவேளை அவர்கள் விமானத்தினுள் ஏறுவதற்காக மேசையொன்றின் முன்னால் வரிசையாக நின்று கொண்டிருந்தனர்,

'ஆர்மேனிய கெரில்லா'க்களே இக்குண்டு வெடிப்புக்குத் தாம் பொறுப்பு என தெரிவித்துள்ளனர். கடந்தவாரம் ஈரானிய உள்நாட்டுச்சேவை போயிங் விமானமொன்றின் கடத்தல் நாடகத்தின் இறுதிக் கட்டம் இந்த ஓலே விமான நிலையத்திலேயே இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## ரூ. 500 அபராதம்

(சுண்டிக்குளி)

அரியாலையைச் சேர்ந்த சிவக்கொழுந்து பாலகணேஸ் என்பவர் சுமார் ஆறு போத்தல்கள் வடிசாராயம் வைத்திருந்ததாக யாழ்ப்பாணம் மதுவரி திணைக்களத்தினரால் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், சந்தேக நபருக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு எஸ். நாகராசா ஐநூறு ரூபா அபராதம் விதித்தார்.

## உபதபாலகத்தை மூடுமாறு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உபதபால் நிலையத்துக்கு நேற்று முன்தினம் காலை சென்ற 15 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று அங்கிருந்த உபதபால் அதிபரை தபால் நிலையத்தை மூடுமாறு எச்சரிக்கை செய்தனராம்.

இதனால் பீதியடைந்ததபால் அதிபர் குறிப்பிட்ட தபால் நிலையத்தை மூடிவிட்டாராம்

## ராஜகுரு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ராஜகுரு இம்மாதம் 30ம்திகதியுடன் இடமாற்றம் பெற்றுக் கொழும்பு செல்லவுள்ளார். இவரின் இடத்துக்கு திரு. பிராங் டீ சில்வா நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நிதி சேகரிக்கும் குழு

(மன்னார்)

திருமலையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிதியுதவியளிக்கும் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் நிதிசேகரிக்கும் குழுவின் தலைவராக மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தெரிவுசெய்யப்பட்டார்.

இக்குழுவின் பொருளாளராக மன்னார் மாவட்ட அபிவிருத்திசபையின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான செல்வி அருள்சீலி டயஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


# நம்பினால் நம்புங்கள்!




வரண்ட பிரதேசமான வட பிராந்தியத்தில் ஏக்கருக்கு 4,900 தேங்காய்களைச் சேகரிக்கும் விவசாயி குட்டி தம்பி.

சராசரி 30-40 அங்குல மழை பெய்யும் இடப்பரப்பில் சீரத்தையாக பவர்ஸ் விசேட உரத்தினைப் பாவிப்பதனால் நம்பவே முடியாத அளவு அதிக விளைச்சல் ஏற்படுகின்றது.

கிரமமான திட்டமிட்ட பவர்ஸ் விசேட உரப் பாவனையே இது போன்ற விளைச்சலைத்தரும். 80 வருடங்களாக உர வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பவர்ஸ், விசேட தேவைகளுக்குரிய விசேட உரக் கலவையினைத் தருவதில் நிகரற்றவர்கள்.

**நீங்களும் நம்புங்கள்! - பவர்ஸ் மாத்திரமே ஒப்பற்றது என்பதனை!**

மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனைகளுக்கும், முகாமையாளர்.

ABC

**ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்**

5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7651, 7156.

மெற்றிக் அந்தர் ரூபா. 2905/-

### வவனியாவில்

# சகல அரச வாகனங்களையும் பொலிஸ் நிலையத்தில் நிறுத்த ஏற்பாடு!

## பிற்பகல் 4 மணிக்குப்பின் பஸ்சேவை ரத்து!

(வவனியா)

வவனியாவிலுள்ள சகல அரச வாகனங்களுக்கும் பொலிஸ் நிலயத்தில் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இங்கு பிற்பகல் நாலு மணிக்குப் பின்னர் கிராமப்புற பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

வட பகுதியில் அரசாங்க வாகனங்கள் அடிக்கடி தீ வைத்துச் சேதப்படுத்தப்படுவதினுல் இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக வவனியாவிலுள்ள அனைத்து அரச வாகனங்களும் பிற்பகலானதும் வவனியா பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டு அங்கு நிறுத்திவைக்கப்பட்டுப் பாதுககப்பு அளிக்கப்படுகின்றது.

வழமையாகக் காலையில் வாகனங்கள் எடுத்துச் செல்லப்பட்டு மாலையில் பொலிஸ் நிலையம் கொண்டுவரப்படுகின்றன.

இதனை முன்னிட்டு பொலிஸ் நிலையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

. இபோ.ச. வவனியா சாலை பஸ்கள்கூட மாலையானதும் தமது குறுகிய கால பஸ்சேவைகளை நிறுத்திக்கொண்டுள்ளன.

பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டதினுல் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(க)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வரும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டியொன்று கிடைக்கவுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின் பொருட்டுக் கிளிநொச்சிக்கு வருகை தந்த ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிடம்

(12ம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் இன்று புனித சின்னப்பர் திருவிழா

மனிதன் தவருன பாதைகளில் நடப்பதுண்டு. இறையருள் அவனைத் தடுப்பதுண்டு' உணர்ந்தவர் திருந்தி உன்னதமடைவதுண்டு. இதன் சாட்சியே புனித சின்னப்பர் வரலாறு.

கிறிஸ்தவ மறையினை ஒழித்திடப் புறப்பட்டு, மனிதாபிமானமற்ற முறையில் கொலை, கொள்ளை புரிந்து டமாஸ்கஸ் கிறிஸ்தவரை அழித்திடக் குதிரையில் விரைகையில் விண்ணினின்றும் இறைகுரல் ''சவுலே! சவுலே! என்னை ஏன் துன்புறுத்துகிருய்'' என்பது கேட்டு மனந்திரும்பி தான் இழைத்த தீங்குகளுக்குத் தானே பரிகாரம் செய்து இறுதியில் கிறிஸ்துவுக்காய்ச் சாட்சியுமானவர் சான்ருேர் சின்னப்பர். இது புனித சின்னப்பர் பெருவாழ்வுபற்றிய சில வரிகள். அவர் எழுதிக் குவித்த திருமுகங்கள் இன்றும் அவர் சிந்தனைத் திரட்டாய்த் திகழ்கின்றன.

கொக்குவிலில் தமிழாய்வுத் தந்தை சுவாமி ஞானப்பிரகாசர் அமைத்த ஆலயத்தில் இன்று ஞாயிறு அப்புனிதரின் திருவிழா பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. காலை 7-30 மணிக்குத் திருநாட் திருப்பலியும் பின்னர் திருச் சுரூப பவனியும் இடம்பெறும். இறுதியில் அன்னதானமும் இங்கு இன்று நடைபெறவுள்ளது.

இவ் ஆலயம் கிறிஸ்தவர்களுடன் சேர்த்து இந்துக்களுக்கும் ஏன் முழு மானிடர்க்குமே ''மக்களே மக்களே ஏன் என்னைத் துன்புறுத்துகிறீர்கள்'' என்ற இறைவனின் இரங்கல் குரலின் குறியீடு. ஆகவே அனைவரும் சிந்திப்போம். இறைவழி நடக்கின்ருேமா? எம்மத வழி நடக்கின்ருேமா? மக்கள் நலம் பேணுகின்ருேமா?நடந்த பாதை எப்படியும் இருக்கட்டும். சவுலைச் சின்னப்பராக்கிச் சரித்திரம் படைத்த இறைவன், எமக்கும் புது வாழ்வு தருவான். இனி இறைபாதையில் நடையிடுவோம். நற்கதி பெற்றிடுவோம்.

— பற்றிமாகரன்

## வருடாந்தஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள புனித சின்னப்பர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை திருப்பலியுடன் ஆரம்பமானது.

இன்று விசேட பூசைப்பலியும், திருச்சுரூபப்பவனி, புனிதரின் ஆசி, அன்னதானம் ஆகியன இடம்பெறவுள்ளன.

### பல உள்ளங்களைத்தூய்மைப்படுத்திய

## இராமநாதக் குருக்கள்

மனிதன் தனது அரியகுணங்ளால்-அரிய-செயற்கரிய செய்கைகளினுல் தெய்வமாகிருன். மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். நமதுகுருகு. இராமநாதக் குருக்கள் அவர்களிடத்தில் எத்தனையோ சிறப்பான குணங்கள் இருந்தன. ''அரம் போலும் கூர்மையரேனும் மரம்போலல்லவர் மக்கட்பண்பில்லாதவர்'' என்பர். அறிவுடையார் எல்லாம் உடையர். பண்புக்குமரியாதையும் பெருமையும் கொடுத்தவர் இராமனுதக்குருக்கள்.

இராமநாதக் குருக்களைக் கருவியாக வைத்து இறைவன் சர்வான் மாக்களையும் அவர்கள் வாழ்க்கை ரஷ்ஷிப்புக்கு சமயக்கிரியைகள் அனைத்தையும் செய்து முடித்தார். இவருக்கு ஆர்வமிருந்தது. சமயக் கிரியைகள் அத்தனையையும் தனக்கு மேம்பட்ட ஞானமுடையவர்கட்ரும் செய்ய முன்வந்தவர். உள்ளத்தில் பக்திவைராக்கியம் கொண்டு அவற்றைச் செய்துமுடித்தார். கடவுள் உண்டு என்னும் நம்பிக்கையை தம்மை அண்டியவர்கள் அனைவருக்கும் உண்டாக்கியவர் ''சண்டி ஓமம்'' போன்ற புதுத்திருப்பங்களை சமயக்கிரியைகளில் ஏற்படுத்தியவர். குருவாழ்க்கையில் ஆடி அடங்கி சமாதியாகிவிட்டார். ஒரேயொரு லட்சியத்திற்காகவே தம்வாழ்நாளைக் கழித்தவர். வருவது வரட்டும் என்று எண்ணி எதையும் முன்னின்று செய்தார். தாம் வாழ்ந்த காலத்துள் சாதிக்கவேண்டுவதத்தனையும் சாதித்து அமைந்து விட்டார்.

நமது சைவசமயத்தில் மாற்றம் ஏற்பட அச்சமயத்தில் நமக்கு விருப்பம், ஆர்வம் ஏற்பட இதுவரை ஒரு உதாரண புருஷனுக - நமக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து வந்தவர்கு. இராமநாதக்குருக்கள் சைவசமய நெறிகளும், உயர் குணங்களும், பண்புகளும் அவரிடம் குடிகொண்டிருந்தன. பெருந்தன்மையான இக்குணங்களால் இராமநாதக்குருக்கள் தேவனுகி இருந்தார். அவரது பூஜைக்கிரமம், கிரியா முறைகள் சைவமக்களது வாழ்க்கையை மலர்வித்தது. ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கை

(12-ம் பக்கம்பார்க்க)


# மங்களகரமான திறப்புவிழா

யாழ்நகரில்
ரி. வி. பழுதுபார்க்கும்
பராமரிப்பு நிலையம்

ஜேர்மனி ரெலிபங்கன் T V உற்பத்தி நிறுவனத்தில்
நிபுணத்துவம் பெற்றவர் சேவையாற்றுகின்ருர்.

நொடிப்பொழுதில் உங்கள்
ரெலிபங்கன் J V C மற்றும் ரெலிவிஷன்களை
குறைந்த செலவில் பராமரிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும்
எம்மை நாடுங்கள்.

அன்ரனு — ரி. வி. பொருத்தித் தரப்படும்.

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24261


## மாவைப்பதிவாழ் மாமணிச்சுடரே

மாவைப் பதிவாழ் மாமணிச் சுடரே
மாமுகம் நீங்கி நல்லிளம்
பூவைகண் டுவந்த புனிதமா நிதியே
புனிற்றிளங் கன்று மற்றென்றை
ஆவிழந் தவறு மாயவோர் பண்பின்
அந்தோ அலறிமற் றுன்தாள்
கூவிவந் தடைந்தேன் குமரா நீநின்
குரைகழல் காட்டியாண் டருளே

கோவென நித்தம் குரைகட லொலித்தே
குலவிடு கீரிநன் மாமலை
பூவென நித்தம் பொலிந்துநின் றிலங்கும்
புனிதமா தீர்த்தமிங் குவக்கும்
தேவெனக் காகிய திருவே அமுதே
செவ்வேற் திறங்கோன் தூய
மாவைநற் பதிவளர் மணியே அன்பாய்
மற்றெனையு நீயாண் டருளே

ஆகம, நற்சீர் ஆலயத் துற்ற
அருளே அமுதே அடியார்
வேகம தகல விழைந்துநன் கேத்தும்
விநயமார் திருவே வியன்சீர்
ஏகம தாகிய வெம்பிரா னிந்த
எழிலார் உருவே அருட்சீர்
தாகம தாற்றிநீ ஆள்வாய் மாவைத்
தலம்வளர் ஆனுமா முகனே

— தென் புலோலியூர் கு. பெரியதம்பி


உங்கள் முதலீட்டிற்கு நாடுங்கள்
SHABRA UNICO FINANCE Ltd.
61, நியூபுலர்ஸ் வீதி, கொழும்பு - 4. Tel: 589310
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். Tel: 22073

கவர்ச்சிகரமான வட்டிவிகிதங்கள்

| 6 மாதம் | 1 வருடம் | 2 வருடம் |
|---|---|---|
| 20% | 27% | 30% |

நிதி ரீதியான உதவிகள் மற்றும் ரி. வி., வீட்டுப் பாவனைப் பொருட்கள் யாவற்றையும் தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை காரணமாக யாழ் நகரகிளை காலை 8-00 மணி முதல் மாலை 3-30 வரை திறந்திருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்ருேம்.

## கிருஷ்ணராசாவிற்கு கார் அன்பளிப்பு முயற்சி

(கிநொச்சி)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் கிளிநொச்சித் தொகுதி உறுப்பினர் இ. கிருஷ்ணராசாவிற்கு கார் ஒன்று அன்பழிப்புச் செய்யப் படவுள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் திரு. யோகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதிசேகரிக்க குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. குழுவின் தலைவராக திரு. மு. யோகலிங்கம் தெரிவானுர். இக்குழுவினர் குறைந்தது ஒரு லட்சம் ரூபாவாவது சேகரிப்பதெனவும் தீர்மானித்துள்ளனர்.

முதல்நாள் நிதிசேகரிப்பின் போது வர்த்தகர்கள் ஐயாயிரம் ரூபாவீதம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருமலைமக்களுக்கு யாழ். லயன்ஸ் உதவி

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் வன்செயல்களால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்கென யாழ். லயன்ஸ் கழகம் திருகோணமலை லயன்ஸ் கழகத்திற்கு ரூபா 5,000 அனுப்பி வைத்துள்ளது.

மன்னுரில் நடைபெறும் கூட்டணியின் மாநிலமாநாடு முடிவடைந்தபின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் இக்காரை அன்பளிப்பு செய்வதெனவும் தெரியவந்தது.

## மன்னுர் பஸ் நிலையம் அடுத்த மாதத்தில் இயங்கும்

(மன்னுர்)

மன்னுர் பொதுபஸ் நிலையத்தின் வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

அடுத்த மாத இறுதிக்குள் திறப்பதற்கேற்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போக்குவரத்து அமைச்சின் நிதி உதவியுடன் இவ்வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

## "ஒற்றுமையை உருவாக்க வேண்டும்"

(ஒட்டுசுட்டான்)

''விளையாட்டுப் போட்டிகளினுல் பொருமையும் பகமை உணர்வுகளும் ஏற்படக்கூடாது ஒற்றுமையும்; பரஸ்பர நல்லெண்ணமும் உருவாக வேண்டும்.''

இவ்வாறு ஒட்டுசுட்டான் கிராமோதய சபைத் தலைவர் திரு, ச. தில்லையம்பலம் கூறினுர்.

என்று மன்னுர் மாவட்ட அபிவிருத்திச் சபை இணைப்பதிகாரி ஜனுப் எம்.அக்பர் தெரிவித்தார்.

காதலியார் சம்மளங்குளம் விளையாட்டு மைதானத்தில் இல்லங்களுக்கிடையிலான நடத்திய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் அவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். திரு. சி. பொன்னம்பலம் தலைமையில் இவ் வைவபவம் நடைபெற்றது.

காதலியார் சம்மளங்குளம் பாரதி விளையாட்டுக்கழகம் தனது இல்லங்களுக்கான நடத்திய இல்ல விளையாட்டுப் போட்டியில் 'சிவப்பு இல்லம்' முதலாம் இடத்தைப் பெற்றது.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் ஏ. ரி. ஆறுமுகம் வழங்கினுர்.


# அங்கர்

## சிறந்ததையே விரும்பும் மக்களால் பெயர் சொல்லி கேட்கப்படுவது




விலை ரூ. 23 00 இலிருந்து

நியூசிலாந்து - உலகிலேயே செழுமையான பால பண்ணைகளைக் கொண்டது அதோடு உலகிலேயே அமோகமானபால தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வது, அவற்றை அங்கர் சின்னத்துடன் விற்பனைப்படுத்துவது.

பசுமையான பூமியிலிருந்து பசுமையானபால் கிடைப்பதே அங்கரின் சிறப்புக்கு அஸ்திவாரமாகும் இதற்கான சான்றுகள்தான் சர்வதேசபுகழ் ரகங்களான பால் மாவுகள், சீஸ்கள், பட்டர்கள் மற்றும் விசேஷ உணவுத்தயாரிப்புகள்.

ஆகையால்தான் சிறந்த தரத்தை விரும்பும் மக்கள் அங்கர் என பெயர் சொல்லிக்கேட்கிருர்கள்...அதுவும் உலகில் பல பாகங்களிலுமுள்ள 100 நாடுகளிலுள்ளோர்.

அங்கர்
-இயற்கை நலம் மிக்கது!

ஏக ஏஜன்டுகள்:
ஜோன்ஸ் ஓவர்சீஸ் லிமிட்டெட்
7 பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி 35166/26351-3

RJA / 3431

## சட்டமுறையாக சுயாட்சியுடைய

# ஈழம் மலர்வது எப்படி?

**சோமசுந்தரம் வன்னியசிங்கம்**

சிறிலங்காக் குடியரசு வடக்குக் கிழக்கைப் பொறுத்த மட்டில் சட்ட வலுவற்றது. அக்குடியரசின் அரசமைப்புச் சட்டத்தை சட்ட வலுவுடையதாகச் செய்வதற்கு ஜனாதிபதி ஜயவர்தன வடக்குக்கிழக்கில் அரசமைப்புச் சட்டத்திற்கு சாதகவாக்கைக் கோரி (Seeking an Affirmative Vote! ஒருஅபிப்பிராயவாக்கெடுப்பை நடாத்தவேண்டுமென்று தமிழ் மொழி இன மக்கள் ஒரே குரலாகத் தனி ஒரு கோரிக்கையாக தமது அபிலாஷையைப் பிரகடனம்செய்ய வேண்டும் என்று சென்ற சில ஞாயிறு இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளில் விளக்கப்பெற்றது. மேலும் ஒத்துழையாமை என்ற ஆயுதத்தை கையாண்டு ஜயவர்த்தனபுர அரசை அவ்வாறு செய்ய நிர்ப்பந்திக்கவேண்டும் என்று ஆலோசனை கூறப்பெற்றது.

பல நண்பர்கள் அவ்வாறு ஜயவர்த்தனபுர அரசு வாக்கெடுப்பை நடாத்தாவிடின் என்செய்வது? சட்டமறுப்பு, வரிகொடாஇயக்கம் ஆகியநடவடிக்கைகளா? என்று வினவுகிறார்கள். பலாத்காரம் இல்லாமல் பலன் கிட்டாது என்று கூறுகிறார்கள்.

### ராமராச்சியம்

முதலில் பலாத்காரம் ஏன்? ஒத்துழையாமை என்ற சட்டமுறையான உபாயத்திற்கு முரணானது என்பதை விளக்கிவிட்டு, ஒத்துழையாமையை ஆராய்வோம். சுயாட்சியை நாடும் தமிழ்மொழி இனம் விழைவது முறையான திறமையும் நீதியும்கொண்ட ஒரு சுயாட்சி பொதிந்த ஈழமே. அன்றி அராஜகமும் குளறுபடியும் அல்ல; ஈழம் மலரும் பொழுது முறையான சீரிய அரசமைப்பும் நிர்வாகமும் உருவாக்கப்படல் வேண்டும். ஈழம் ஒருராமராச்சியம் என்று மக்களும் பிறரும் பாராட்ட வேண்டும். கட்டுப்பாடும் திறமையும், நீதியும் பொதிந்த சுயாட்சி நிர்வாகத்தை பலாத்காரத்தையும் வன்செயலையும் கட்டவிழ்த்துவிட்டு எய்த முடியாது.

### அடிப்படை தர்மம்

இரண்டாவதாக எவனொருவனும் உயிர், உடல், உடைமை என்பவற்றைப் பொறுத்த மட்டில் நீதிபரிபாலனம் மூலம் அல்லாது பாதிப்புக்குள்ளாகலாகாது. இது ஒரு அடிப்படையான அரச சமுதாயத்தின் தர்மம். மாற்றான் இந்நியதியைக் கைக்கொள்ளவில்லையென்பது நாம் அந்த நியதியைக் கைவிடுவதற்கு சாட்டாக முடியாது.

மூன்றாவதாக பலாத்காரம் உபயோகிக்கப்படும் பொழுது எத்தனையோ அப்பாவி மக்கள் உயிர் இழக்க நேரிடும். வழியால் சென்ற சிறு பையன் தபால் குண்டுக்குப் பலியானதுபோல் எத்தனை அபத்த விளைவுகள் ஏற்படும்.

நான்காவதாக திறமான ஒத்துழையாமை என்ற ஆயுதம் கையில்இருக்க ஏன் பலாத்காரத்தை நாடுவான்? கையில் கனியை வைத்துக்கொண்டு காயைப் பறிக்க முற்பட்ட நிலைமை உருவாகிறதே!

### ஒத்துழையாமை

ஒத்துழையாமை என்பது மிகப் பலம் வாய்ந்த ஒரு ஆயுதம். வேறு ஒரு இனத்தினால் அடக்கி ஆளப்படும் மக்கள் உபயோகிப்பதற்கான ஆயுதம். அடக்கி ஆளப்படும் இனத்திடையே அத்தகைய ஆட்சிக்குக் கணிசமான ஒத்துழைப்பு இல்லாமல் அந்தப் பிறனுடைய ஆட்சி நிலைக்க முடியாது. இது அடிப்படைத் தத்துவம். வரலாற்றில்கண்டறிந்தஉண்மை. எந்த சாம்ராச்சியம்நிலைத்தது? ஜயவர்த்தனபுர சாம்ராச்சியமா நிலைக்கப்போகின்றது?

ஒத்துழையாமை என்பது பல கட்டங்களை (Phases) கொண்டது. சட்ட மறுப்பு, வரி கொடாமை ஆகியவை இறுதிக் கட்டத்திற்குச் சேர்ந்தவை.

முதல் கட்டம் அந்நிய ஆட்சியாளரின் தார்மீக வலுவை அபகரிப்பதே. ஆங்கிலத்தில் To Deprive The Alien Ruler Of The Moral Force என்று கூறுவர். எந்த ஒரு சர்வாதிகாரமோ, சாம்ராச்சிய அதிகார பீடமோ தான் வாள் பலத்தால் படைப் பலத்தால் ஆட்சி செய்கிறோம் என்று சொல்வதில்லை. ஆளப்படும் மக்கள் நமது ஆட்சியை விரும்புகிறார்கள், பாராட்டுகின்றார்கள், மெச்சுகிறார்கள் என்று கூறிக்கொண்டே ஆட்சி செய்கிறது. ஏன் ஜனாதிபதி ஜெயவர்த்தன சொல்வதென்ன? வடக்குக் கிழக்கு மக்கள் சிறிலங்காக் குடியரசை மெச்சுகிறார்கள்; தனது அரசைப் போற்றுகிறார்கள்; ஆனால் ஒரு சில பயங்கர வாதிகள் அதைக் குழப்புகிறார்கள் என்பதுதானே அவருடைய பல்லவி! அவ்வாறு ஒரு பல்லவியைப் பாட தமிழ் மொழி இனம் போதிய காரணம் வழங்கியிருக்கிறது.

எவ்வாறு தமிழ் மொழியினம் இவ்விடயத்தில் தவறிழைத்திருக்கிறதென்பதை ஆராயவாம். ஒரு இனமக்கள் குறிப்பிட்ட ஒரு அரச சமுதாயத்தில் வேறொரு இனத்துடன் சேர்ந்துவாழ உடன்பட்டுச் செயல்பட்டால் பின்னர் அந்த இனம் குறிப்பிட்ட அரச சமுதாயம் ''மெஜாறிற்றி ஆட்சிப்படி'' செய்கின்ற சட்டங்கள் ஒழுங்குகட்கு அமைய வேண்டியதே! குறிப்பிட்ட அரச சமுதாயத்துள் இருந்து கொண்டு ''மெஜாறிற்றி''த் தீர்மானத்திற்கு எதிராக ஆர்ப்பரிப்பது தவறு. அந்த ''மெஜாறிற்றி'' குழுவை மனமாற்றம் செய்வது ஒரு விடயம். ஆர்ப்பரிப்பது வேறு ஒரு விடயம். ''வாலை நிமிர்த்து'' ''வாலை நிமிர்த்து'' என்று நாயைக் கேட்பது போன்ற நடவடிக்கை; அசல் அசட்டுத்தனம். பயங்கர வாதச்சட்டத்தை ரத்துச்செய்; தமிழ் பொலிசு தா; தமிழ்மொழியில் எழுது என்பது சுத்த முட்டாள் தனம். அப்படி ஒரு உரிமையும் நிலைநாட்டக்கூடியதன்று. சுயாட்சி என்ற ஒரு கோரிக்கைதான் மறுக்க முடியாத ஒரே ஒரு அடிப்படை உரிமை வேறு எந்த உரிமையையும் 'மெஜாறிற்றிக்கு' எதிராக எழுப்பமுடியாது.

ஆனால் சுயராட்சியம் என்ற கோஷத்தை சாதாரண தமிழ் மக்கள், முக்கியமாக இளைஞர்கள் முழங்குகிறார்களேயன்றி தமிழ்தலைவர்கள் கோரவில்லை. சுயராச்சியம் என்ற சொல் எத்தனையோ மொழி கட்குப் பொதுவான சொல். சுயராச்சியம் என்ற தெளிவான சொல் மலைமேல் தீபம் போல் எம் கண் முன் நிற்க அதை விடுத்து சமஷ்டி, மாவட்டசபை, பிரதேசசபை, அபிவிருத்திச்சபை, மொழியுரிமை, பிரசா உரிமை, குடியேற்றம் என்ற தெளிவற்ற நியாயவலுவற்ற பயனற்ற கோரிக்கைகளை முன்வைத்து குட்டையைக் குழப்புவதே நாம் செய்த தவறு.

அந்நிய ஆட்சியாளன் சாட்டுச் செல்லும் ஆதரவை அம்பலப்படுத்தி அவனுடைய தார்மீக வலுவை முறியடிப்பதே ஒத்துழையாமையின் முதற் கட்டம்; மூலாதாரமான நடவடிக்கை அந்நிய ஆட்சியாளனுக்கு இந்தத் தார்மீக வலுவைக் கொடுத்து விட்டு கொக்கரிப்பது வர்ணிக்கமுடியாத மூடத்தனம்.

மக்களால் தெரிவு செய்யப் பெற்று மக்களின் பிரதி நிதிகள் என்ற அந்தஸ்துப் பெற்றவர்கள் ஒரு ஒத்துழைப்பையோ அரசமைப்பில் பங்கெடுப்பையோ வழங்கக் கூடாது. நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவரென்றாலென்ன' மாவட்டசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவரென்றாலென்ன. மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவரென்றாலென்ன பிரதிநிதித்துவம் வாய்ந்தவர் எவரும் அரசமைப்பில் எதுவித பங்குமெடுக்கக் கூடாது.

அவ்வாறு தெரிவுசெய்யப் பெற்றவர் அம்மன்றங்களின் சபைகளில் பங்கெடுப்பதன் அர்த்தம் என்ன. அரசமைப்புச் சட்டத்திலேயே அர்த்தம் என்ன என்று விளக்கப் பெற்றிருக்கிறது.

''இப்பதவிக்கான கடமைகளையும் பணிகளையும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்கப் பற்றுறுதியோடு புரிவேன் என்றும், நிறைவேற்றுவேன் என்றும், இலங்கைக் குடியரசுக்கு விசுவாசமுள்ளவனாக இருப்பேன் என்றும் எனது திறமைக்குஇயன்றவரை இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன்.

என்று சத்தியம்செய்து கொடுத்தே அம்மன்றத்தின் அல்லது சபையின் உறுப்பினராக செயல்படுகின்றனர்.

தமிழ்மொழி இன மக்களால் தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதி இவ்வாறு சத்தியம்செய்து கொடுத்தபின் அந்நிய ஆட்சியாளனுக்கு வேறு என்ன தார்மீக வலுவேண்டும். பிரதிநிதிகள் இவ்வாறு சத்தியம் செய்தவுடன் சுயாட்சி கோருபவர் எல்லாரும் பயங்கரவாதச்சட்டத்துள் கொண்டுவரப்படுவார்.

அந்நிய ஆட்சியின் இத் தார்மீக வலுவை முறியடிப்பதுவும் இவ்வாறு சத்தியம்செய்து கொடுப்பதை நிறுத்துவதுமே சுயாட்சி நாடும் தமிழன்செய்ய வேண்டிய முதற்கடமைதெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகள் இந்தச் சத்தியம் செய்தவுடன் ஏனையோர் ஊமைகளாகிவிட வேண்டியிருக்கிறது.

தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. நிச்சயமாகச்சுயாட்சிப் போராளிகள் எவராயிருந்தாலென்ன கூட்டாகக் கட்டுப்பாடாகத்தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி மேற்படி சத்தியம்செய்ய மறுத்து அம் மன்றத்திற்கு வெளியே நிற்கவேண்டும். அவர்களுக்கு சம்பளம் கிடையாது. சலுகைகள்கிடையாது. ஆனால் அவர்கள்தான் தமிழ்மொழி இனத்தின் பிரதிநிதி என்பது மறுக்கமுடியாத உண்மையாக நிரூபிக்கப்படும். அந்நிய ஆட்சி நடக்கிறதென்பதை மறைக்க முடியாமல் வெளியாகும். பிறநாட்டவர்கள் தமிழர்பிரச்னை உள்நாட்டு விடயம் என்றோ குடும்பக்கலகம் என்றோ சொல்லமுடியாது.

ஜயவர்த்தனபுர அரசு பிரச்னையைத் தட்டிக்கழிக்க முடியாத யாப்பு ரீதியானசூழ்நிலை நெருக்கடி (Constitutional Cri.i) உருவாகும். வேறும அத்தகைய தெரிவுசெய்யப் பெற்ற குழுவினர் ஜயவர்த்தனபுர அரசைநோக்கி உங்கள் அரசமைப்புச்சட்டம் வடக்குக் கிழக்கில் வலுவற்றது; அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துக என்ற கோரிக்கை விட்டால் பிறநாட்டவர் உட்பட எவரும் செவிசாய்க்காமல்விட முடியாது.

இன்று கனேடியன் பிரதிப் பிரதமர் இலங்கையில் தமிழினம் துன்புறுத்தப்படவில்லை என்று சொல்லிப்போவதற்குக் காரணம் என்ன? நாம் தெரிவு செய்த பிரதிநிதிகள் மேலே சொன்ன சத்தியப்பிரமாணம் செய்து அந்நிய ஆட்சிக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் பொழுது ஏன் கனேடியப் பிரதிப் பிரதமர் இந்தத் தொல்லையைத் தன் தலைமேல் போடுவார்? செய்யவே செய்யமாட்டார்.

மேலே சொல்லப்பெற்ற ஒத்துழையாமை என்ற ஆயுதத்தின் முதற்கட்டத்தை திரிகரண சுத்தியுடனும், தெளிவான சிந்தனையுடனும், நிதான புத்தியுடனும் செயல்படுத்த தமிழ்இளைஞர்குழாம் கடமைப்பட்டிருக்கிறது.

யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறெஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள் மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்...

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## 'சமய உண்மைகளை உலகிற்கு எடுத்துக் காட்டினர்''


(யாழ்ப்பாணம்)

''சைவசமயம் குன்றிய அக்காலத்தில் சமய குரவர்கள் தோன்றி சமய உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டி சமயத்தை நிலைபெறச் செய்தமையால் சைவமக்கள் என்றும் அவர்களைப் போற்றி வருகிறார்கள். மாணிக்கவாசகர் தேனினும் இனிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தந்து மக்கள் உய்திபெறும் மார்க்கத்தையும் காட்டிச் சென்றார்.''

இவ்வாறு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசைத்தின விழாவில் பேசிய ஆசிரியர் திரு சி. சீவரத்தினம் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:- ''வேதாகமங்களை முதல்நூலாகக் கொண்ட சைவநெறி மக்களின் வாழ்க்கை நெறியோடு இணைந்து

[7-ம் பக்கம் பார்க்க]



இலங்கைக்கு விஜயம் செய்த கொரிய பாராளுமன்ற தூதுக்குழு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை யும் சந்தித்தது. கொரிய தூதுக்குழுவுக்கு திரு. யூன்-வான் கிம் தலைமை வகித்தார்.

## டைனமைட் கெற்புகளை ராணுவம் கைப்பற்றியது!

(மன்னார்)

தலைமன்னார் கடற்கரையில் அநாதரவாகக் கைவிடப் பட்டிருந்த டைனமைட் கெற்புகளைக் கைப்பற்றிய இராணுவத்தினர் அவற்றை தலைமன்னார் சுங்க இலாவில் ஒப்படைத்தனர்.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட டைனமைட் கெற்புகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே அநாதரவாகக் காணப்பட்ட பொதி ஒன்றை சோதனையிட்டபோது டைனமைட் கெற்புகளைக் கைப்பற்றினர்.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இருதயத்துடிப்பு கருவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு இருதயத் துடிப்பினை அறியும் கருவி மிக விரைவில் கிடைக்கவுள்ளது.

இந்த யந்திரத்தைக் கொள்வனவு செய்யவென சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், 1983-ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 22,500ஐ ஒதுக்கிக் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சமய உண்மைகளை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உய்திபெறும் வழியைக் காட்டுகின்றது. துன்பம் வந்த போதும் இறைவனை மறவாது வாழப் பழகிக்கொள்வது அவசியமாகும். சமய குரவர்கள் பல துன்பங்களை அடைந்த போதும் சிவன் அருளால் வெற்றி கண்டார்கள்'' என்று கூறினார்.

செல்வன் சி. சுபாஸ்சந்திரன், செல்வி இ. சுலோசனா மணிவாசகர் வரலாற்றைப் பற்றிப் பேசினர். உப அதிபர் செல்வி வி. சபாரத்தின சிங்கி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## புலோலி ப.நோ.கூ.ச.வுக்கு மாடிக்கட்டடம்!

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மந்திகை அரசினர் வைத்தியசாலையின் முன்னல் 75,000 ரூபா செலவில் மாடிக் கட்டடமொன்றை அமைக்கவுள்ளது.

தற்பொழுது மந்திகை அரசினர் வைத்தியசாலையின் முன்னல் இயங்கிவரும் புலோலி-ப. நோ. கூ. சங்கத்தின் மக்கள் கடையும், மருந்து விற்பனை நிலையமும் உள்ள கட்டடத்தின் மேலேயே இம்மாடிக் கட்டடம் அமையவுள்ளது.

## வடமராட்சி உதவி அரசஅதிபர் அலுவலக இடமாற்றங்கள்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உதவியாளராகக் கடமையாற்றிய திரு கே. கணபதிப்பிள்ளை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உதவியாளராகக் கடமையாற்றிய திரு எஸ்.சந்திரசேகரம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு ஐ.பாலசுப்பிரமணியம் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அலுவலக உதவியாளராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி வி.சின்னதுரை கரவெட்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அல்வாய் மேற்கு கிராம சேவை அலுவலர் திரு எஸ். நடேசபிள்ளை ஓய்வு பெற்றுச் செல்வதைத் தொடர்ந்து கிளிநொச்சி அக்கராயன் குளம் கிராமசேவை அலுவலர் திரு கே. தர்மபாலன் அல்வாய் மேற்குக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## கள்ளக்கடத்தலை தடுக்க நடவடிக்கை

(மன்னார்)

தலைமன்னார் கடல் பிராந்தியத்தினூடாகவும், சுங்கவழியினூடாகவும் இடம்பெறும் கள்ளக்கடத்தல் முயற்சிகளை முற்றாகத் தடைசெய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மன்னார் அரசாங்க அதிபரும், மேலதிக அரசாங்க அதிபர்களும் மேற்கொண்டுவருகின்றனர்.

இதற்கு முன்னோடியாக மன்னார் அரசாங்க அதிபர் தலைமன்னார் துறைமுகத்திற்கு விஜயம் செய்து சுங்க நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வருகிறார்.

தலைமன்னார் பகுதியில் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு வேண்டிய சகல ஒத்துழைப்பையும் பொலிசாரும், இராணுவத்தினரும் வழங்குவார்கள் என மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## "முன் மாதிரியான கிராமம்"

(கிளிநொச்சி)

திருநகர் கிராம மக்களின் முன்மாதிரியை ஏனைய கிராம மக்களும் பின்பற்ற வேண்டும்''.

தொழில் திணைக்களத்தின் தையற்பயிற்சிப்பாடசாலையை கிளிநொச்சி திருநகரில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

திரு. நா. வேலாயுதன் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டசபை உறுப்பினர் இ. கிருஷ்ணராசா, தொழில்திணைக்கள அதிகாரி திரு. சத்தியானந்தசோதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சி நிலையத்திற்கு ஐந்து தையல் மிசின்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒன்பதுமாத கால பயிற்சிக்கு 20 யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## நாடகமன்ற நிர்வாகிகள்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை வாணிறிக்கிறியேசன் நாடகமன்ற நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: திரு. க. தம்பிராசா, தலைவர்: திரு. க. சுப்பிரமணியம், செயலாளர்: திரு. எம். லோறன்ஸ், பொருளாளர்: திரு. இரா. பாலசசந்திரன்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## பரியோவான் வெற்றி

(அரியாலை)

யாழ். பரி.யோவான் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் பரி. யோவான் கல்லூரி இனிங்சாலும், 50 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

யாழ். பரி. யோவான் கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான அரை இறுதி கிரிக்கட் போட்டியில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது.


இப்போது கையிருப்பில் உண்டு.

தரம் சிறந்த, விலை குறைந்த

**சென்ட்ரிக் N100 வீட்டுபயோகப் பம்பு**

தரச் சிறப்புகொண்ட சென்ட்ரிக் வகையருக்களுள் இது ஒரு புதிய ரகம், ஆம், தரமான இப் பம்பு மிகமிக் குறைந்த விலையில் கிடைக்கிறது

தரமான பொருள்கொண்டு, கைதேர்ந்த வேலைப்பாட்டில் உருவாக்கப்பட்டது சென்ட்ரிக் N100, இதற்கான மோட்டரும் பம்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமைந்தது, எல்லா சென்ட்ரிக் பம்புகளையும் போலவே N 100 பம்பும் தரம் குன்றாது நேர்த்தியாக உருவமைக்கப்பட்டுள்ளது, சென்ட்ரிக் N 100 ஆண்டாண்டு காலம் தொல்லையில்லாத சேவை புரிவதற்கு இதுவே உத்தரவாதம்.

CENTRIC

ரூடா 2195/-

★ கடின உழைப்புதரும், முற்றிலும் மூடப்பட்ட, விசிறியில் குளிராகும் இன்டக்ஷன் மோட்டர்.

★ வார்ப்புப் பித்தளை இம்பெலர் சகிதம் கடின உழைப்பு தரும் வார்ப்பிரும்பு பம்பு.

சென்ட்ரிக் - ஒரு சீவிய கால முதலீடு.







Mel Ads

சிறந்த பராமரிப்புச் சேவையுண்டு.
ஜினசேன லிமிட்டெட்,
4, ஹுணுப்பிட்டிய ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9

வடமாகாண ஏக விநியோகஸ்தர்: நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், — போன்: 23016


# வசதிக்கேற்ப வாங்குவதற்கு பெயார் பிராண்ட்

பெயார் பிராண்ட் ஆடை நீக்காத பால் மா பக்கெட்டுகள்
ஒவ்வொரு குடும்பத்தின் தேவைக்காகவும்.... இரண்டு அளவுகளில் வருகின்றன.
400 கிராம் சிக்கனப் பக்கெட்டின் விலை ரூ. 22.40
சிறு பக்கெட்டின் விலை ரூ. 15.50

## ஆலோசனைகள்

[illegible]

உங்கள் வாடிக்கைக் கடையில் பெயார் பிராண்ட் பால் மா என்று கேட்டு வாங்குங்கள்.



# பெயார் பிராண்ட் நீர் மட்டுமே நீக்கப்பட்ட சுத்தமான பசுப்பால்

ஒரு கிளாஸ் சுத்தமான நீரில் 3 மேசைக் கரண்டி பெயார் பிராண்ட் பால் மாவைக் கரையுங்கள்.

ஆரோக்கியமும் அற்புத சுவையும் தரும் ஒரு கிளாஸ் பசுப்பால் உங்கள் கைகளில் தவழும். பெயார் பிராண்ட் பால் மா புத்தம் புதிய பசுப்பாலில் இருந்து மிகவுயர்ந்த தராதரங்களுக் கேற்பப் பெறப்படும் ஒப்பற்ற பாலுணவாகும்.

## நெஸ்லே தயாரிப்புகளின் விநியோகஸ்தர்கள்

பெயார் பிராண்ட் பால் மா நெஸ்லே பதனிடும் நுட்பத் திறமையைத் தயாரிக்கப் பட்டு இலங்கையில் நெஸ்லே உற்பத்திகளின் விநியோகஸ்தர்களான சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ் நிறுவனத்தினல் சந்தைப் படுத்தப்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்களா?

## பரிபூரண பாதுகாப்பு

பெயார் பிராண்ட் பால் மா உறுதியான அலுமீனியம் காகிதப் பையில் அடைக்கப் பட்டு கடின அட்டைப் பெட்டியில் பொதி செய்யப் பட்டுள்ளது. ஆகவே, அதன் தூய்மையில் முழு நம்பிக்கை வைக்கலாம். சுத்தமான பாலுக்குப் பூரண உத்தரவாதம்.

## விட்டமின்களும் பால் புரதமும்

வளரும் பிள்ளைகளுக்கு அத்தியாவசியமான விட்டமின்களும் புரதச் சத்துகளும் நிறைந்த சுத்தமான பசுப்பாலில் இருந்தே பெயார் பிராண்ட் பெறப் படுவதால் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் அது அற்புத பானமாகும்.

# தேடுங்கள் கேளுங்கள் வாங்கிப் பருகுங்கள் பெயார் பிராண்ட்

# குடும்பப் பெண்கள் பெயார் பிராண்ட் பாலையே தெரிவு செய்யக் காரணம் என்ன?




சிறிசு: 250 கிராம் சிறு பக்கெட்டின் விலை ரூ. 15.50

பெரிசு: 400 கிராம் சிக்கனப் பக்கெட்டின் விலை ரூ.22.40

## இன்சுவை, பக்குவமான பொதி, நியாயமான விலை

"எனது அன்புக் குழந்தைகளுக்கு பக்குவமாகப் பொதிசெய்யப்பட்ட சத்து மிக்க, சுத்தமான பாலையே தெரிவு செய்கிறேன். சிக்கன வாழ்க்கையிலும் எனக்கு அக்கறை. ஆகவே, நான் எந்நாளும் பெயார் பிராண்டையே நாடுவதில் வியப்பில்லை. இன்சுவை நிறைந்த பெயார் பிராண்ட் பாலை எனது பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பருகுகின்றார்கள். இதைவிட ஒருதாய்க்கு வேறென்ன வேண்டும்?"



## கொடுக்கும் பணத்திற்குக் கைமேல் பலன்

"தரமான உணவுப்-பொருட்களின் தயாரிப்புக்கு உலகெங்கும் புகழ்பெற்ற ஒரு நிறுவனத்திடம் இருந்து பெயார் பிராண்ட் வருவதால் எனது அன்புச் செல்வங்களுக்கு எவ்வித தயக்கமும் இன்றி அதனைக் கொடுக்கிறேன். அது பக்குவமாக பொதி செய்யப்பட்டுள்ளது.




தரத்தில் ஒப்பற்றது. விலையும் நியாயமானது. பெயார் பிராண்ட் உண்மையிலேயே நாம் கொடுக்கும் பணத்திற்கு முழுப் பெறுமதியையும் தருகிறது.

## சிறு பக்கெட்... சிறு குடும்பங்களுக்கு உகந்தது



"எனது குடும்பத்தில் இரண்டு பேர்தான், எம் போன்றோர்க்கு சிறிய பெயார் பிராண்ட் பக்கேட் முற்றிலும் உகந்தது. சிக்கனமாகச் செலவு செய்ய அது எமக்கு உதவுகிறது.



## சிறுவர் பகுதி

ஒவ்வொரு இலக்க கட்டத்திற்கும் ஒவ்வொரு நிறமாக வர்ணந் தீட்டுங்கள். பெயார் பிராண்ட் கரடியின் உருவத்தைப் பெறுவீர்கள்.



Grant K & E 4952

## ஒரு பார்வை:
# டானியலின் 'கோவிந்தன்'

பிரபல எழுத்தாளர் கே. டானியல் இதுவரை மூன்று நாவல்களை நான்கு தடவைகளில் பிரசுரித்து வெளியிட்டுள்ளார். முதலில் 'பஞ்சமர்' ஸ்ரார் பிரசுரமாக வெளிவந்தது. இரண்டாவதாக 'போராளிகள் காத்திருக்கின்றனர்' வீரகேசரிப்பிரசுரமாக வெளியிடப் பட்டது, மூன்றுவதாக 'பஞ்சமர்' இரண்டாம் பாகத்தையும் இணைத்து 'பிரகாஷ்'' என்னும் தமிழக வெளியீடு வெளியிட்டது. நான்காவதாக சென்னை கார்க்கி நூலகம் 'கோவிந்தன்' என்ற நாவலை வெளியிட்டுள்ளது.

''தூரத்தேயிருந்து மனதால் மேலோட்டமாகக் கிராமத்தைப் பார்த்துப் பேச்சு வாக்கில் அறிந்தவைகளையும் ஊகிப்பவைகளையும் வைத்துக் கொண்டு புனைகதைகளையும் நாடோடிப் பாடல்களைத் தேடிப்பிடித்து தேடியவற்றுள் காமரசம் சொட்டும் பகுதிகளை மட்டும் தெரிவு செய்து தரப்பட்ட நாடோடிப் பாடல் திரட்டுகளையும் தான் கிராமிய இலக்கியங்கள் என்று தமிழ் வாசகர்கள் கண்டிருக்கின்றனர். இந்த மட்டங்களில் நின்று கொண்டேதான் இவைகளுக்கான விமர்சனங்களும் தரப்பட்டுள்ளன. இதனால் கிராமிய இலக்கியங்கள் எனப்பட்டவை கிராமப்புற வாசகர்களாலேயே விரும்பப்படாதவை ஆகியிருந்தன.''

முன்னுரையில் நாவலாசிரியர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது போன்று கிராமப்புற மக்களின் குறிப்பிட்ட கால நடைமுறை பழக்க வழக்கம் பேச்சு கருப்பொருள் ஆகியனவற்றை 'கோவிந்தன்' நாவலில் இழைபோட விட்டுள்ளதனால் தரமான ஒரு கிராமிய இலக்கியத்தைப் படைக்க முற்பட்டு வெற்றியும் பெற்றுள்ளார்.

நூலாசிரியரின் மற்றொரு நாவலான 'பஞ்சமர்' விமர்சகர்களிடையே பாதிப்பை ஏற்படுத்தியதைப் போன்றே 'கோவிந்தன்' நாவலுக்கும் பரந்த அளவில் எதிர்ப்புகளும் வரவேற்புகளும் கிடைக்குமென எதிர் பார்க்கலாம். ஏனெனில் பாத்திர வார்ப்பு சம்பவங்களின் வளர்ச்சி பாத்திரமன எழுச்சிகளின் புறப்பாடுகள் போன்ற இன்னோரென்ன அம்சங்கள் அனைத்தும் மிக அழகாகவே ஆசிரியருக்கு இந்நாவல் படைப்பதற்குக் கைகொடுத்துள்ளன.

'சாதி அடக்கு முறைகள் கொத்தடிமை முறைகள் காலாவதியாகிவிட்டன. குறிப்பாகத் தென்னகத்தோடு ஒப்பிடும் போது ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னரே அழிக்கப்பட்டு இப்போ வேரோடு சரிந்து விட்டது' என்றும் பலர் கூறுகின்றனர். 'கோவிந்தனை'ப் படித்தாலே நடைமுறை வாழ்க்கைக்கும் இந்தக் கூற்றுகளுக்கும்எந்தளவுமுரண்பாடு உண்டென்பதும்பளிச்சிடுகிறது.

நூற்றாண்டு காலத்துக்கு முன்பாகப் பாவனையில் இருந்த பல சொற்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்ததாகப் பின்னப்பட்டுள்ள பாத்திரங்களின் வாயிலாகப் பேசவைக்கப்படும் விதத்தை நாவலைப்படிப்பவர்கள் நன்றாக அனுபவிக்கலாம்.

மனிதப் பாத்திரங்களோடு கோவிந்தன், பொன்னிப் பொட்டை ஆகியஇரண்டுநாய்களும் பாத்திரங்களாக வருகின்றன. உயர்ந்த வீட்டிலும், தாழ்ந்த வீட்டிலுமாக அவை வாழ்ந்தபோதும் இரண்டுமே எஜமான் அடிமைகள்தான். இந்த அடிமைகளுக்கிடையே ஆத்மார்த்தரீதியாக ஏற்பட்ட ஐக்கியம் மனித இனத்திற்கு வர்க்கரீதியான பல பாடங்களாகப் போதிக்கின்றன. இப்படிப் பார்க்கையில் இந்த இரண்டு பாத்திரங்களுமே உயர் அந்தஸ்திற்கு உயர்ந்து விடுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களுடன் வர்க்க அடிப்படையில் இணைந்துபோகும் பஞ்சப்பட்ட ஏழை எளியவர்களையும் மீழ்ச்சி காண முனையும் பஞ்சமர்களையும் சித்தரித்து வர்க்க உணர்வுக்குள்ள அதிஉன்னத அந்தஸ்தைக் கொடுப்பதில் ஆசிரியர் 'பஞ்சமரி'லும் பார்க்க 'கோவிந்தனில்' உயர்ந்து விடுகிறார்.

''நாங்கள் விருப்பு வெறுப்புக்கு உட்படாதவர்கள்; நடுநிலையாளர்கள் என்று விமர்சகர்கள்கூறுவதெல்லாம் வெறும் பொய்யானவை'' என்றும்,

''நீதி, அநீதி என்றஇரண்டு புள்ளிகள் ஒன்றோடொன்று முட்டி நெருங்கிக்கொண்டுநிற்கின்றன. இடையே மூன்றாவது ஒரு புள்ளிக்கு இடமேயில்லை. இதனால் 'கோவிந்தனை' விமர்சிக்கப்புகுபவர்கள் ஏதாவது ஒரு பக்கத்தில் நின்று தங்களை வெளிப்படுத்தியே ஆகவேண்டும். அல்லது (இனங்காட்டிக் கொள்ள மனது இடந்தராத பட்சத்தில்) ஒதுங்கிவிடவேண்டும்'' என்று நாவலாசிரியர் கே. டானியேல் நாவலின் முன்னுரையில் கூறுவன வாசகர்களின் கவனத்தில்படவேண்டிய வரிகள்.

அச்சுப்பதிவு சுத்தமாக-கவர்ச்சியாக-அழகாக மேற்கொள்ளப் பட்டிருப்பதைப் பாராட்டலாம். இங்கொன்று அங்கொன்றாக உள்ளஎழுத்துப் பிழைகளும் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியதே!

மொத்தத்தில் 'கோவிந்தன்' நாவல் போற்றுதற்கரிய முயற்சி; தமிழ் நாவல் உலகிற்கு நல்லதோர் அணி. நம் நாட்டு இலக்கிய அந்தஸ்து இந்நாவல் மூலமாக தமிழ்நாட்டிலும் உயர்த்தப்படும் என்பதில் ஐயமில்லை.

— ந. பரமலிங்கம்

# மன்னார் செய்திகள்

### வருடாந்த உற்சவம்

வங்காலை ஸ்ரீ புனித ஆனாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம்மாதம் 26ம் திகதிவரை நடைபெறும்.

இவ்உற்சவத்தை முன்னிட்டு இம்மாதம் 25ம் திகதி நற்கருணைப்பவனியும், 26ம் திகதி திருநாள் திருப்பலியும் இடம் பெறும். திருநாள் திருப்பலிப் பூசையை மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஒப்புக்கொடுப்பார். தொடர்ந்துபுனிதஆனாள் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் இடம் பெறும்.

### ரயில் பாதுகாப்பு அதிகரிப்பு

செட்டிகுளம் ரயில் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற சம்பவங்களைத்தொடர்ந்து கொழும்பு-தலைமன்னார் ரயிலில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு-தலைமன்னார் ரயிலில் தற்போது ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையிலீடுபடுத்தப் பட்டுள்ளனர்.

### நானாட்டான் உதவி அரச அதிபர்

நானாட்டான் உதவி அரசாங்க அதிபராக திரு. எஸ். எம். குரூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

### ரூ. 1,000 பரிசு

தலைமன்னார் கிராமோதய சபையில் அங்கம் வகிக்கும் சங்கங்களில் சிறந்ததாகத் தெரிவுசெய்யப்படும் சங்கத்திற்கு வருடமுடிவில் ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும்.

தலைமன்னார் கிராமோதய சபையில் அங்கம்வகிக்கும் சங்கங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு சேவைக்கும் 5 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு வருடமுடிவில் அதிக புள்ளிகளைப்பெறும் சங்கத்திற்கே இப்பரிசு வழங்கப்படவுள்ளது.

### ரூ. 10,000 ஒதுக்கீடு

எருக்கலம்பிட்டி பிரதான வீதியைப் புனரமைப்பதற்கென மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் பன்முக வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்நிதியைக் கொண்டு எருக்கலம்பிட்டி பிரதான வீதியைப் புனரமைக்கும் வேலைகளை எருக்கலம்பிட்டி கிராமோதய சபை மேற்கொள்ளவுள்ளது.

### கடலட்டை பதனிடும் தொழிற்சாலை

மன்னார்மாவட்டத்தில் கடற்தொழிலை அபிவிருத்திசெய்யும்திட்டத்தின்கீழ் ஏற்கனவே இயங்காதநிலையிலிருக்கும் கடலட்டை பதனிடும் தொழிற்சாலை மீண்டும் இயங்க வைக்கப்படும்.

இதற்கான பரிசீலனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்போது மேற்கொண்டுவருகின்றனர்.


மிகச் சிறுதொகைப் பணத்திற்குப் புத்தம் புதிய தையல் மெஷின்!

இதோ, உங்களுக்கு சிங்கர் வழங்கும் விசேட தவணைக் கொடுப்பனவுச் சலுகை!

அதி நவீன தொழில் நுட்பத்தில் உருவான சிங்கர் 15 NL 1 அல்லது 15 NL 2 தையல் மெஷின் ஒன்றை உங்களது உரிமையாக்கிக் கொள்ள இதுவே இலகுவான வழி.

முதலில் சிறுதொகை மட்டுமே செலுத்திப் புத்தம் புதிய தையல் மெஷின் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள். எஞ்சிய தொகையை இலகுவான தவணைகளில் செலுத்தலாம்.

இல்லத்தில் இன்பம் பொங்க சிங்கரின் துணையை நாடுங்கள்.

சிங்கர் உங்கள் தையல் வேலையைச் சுலபமாக்குகின்றது.

விலை: 15 NL 1 ரூ. 3,111/-
15 NL 2 ரூ. 2,626/-
வரிகள் தனி.




சிங்கர்

சிங்கர் தவணைக் கொடுப்பனவுத் திட்டம் பொருட்களை வாங்க மிகச் சிறந்த வழி

* சிங்கர் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக அடையாளம்.

# "தமிழர் பிரச்னையைத்தீர்க்க சர்வகட்சி மாநாடே முறையாகும்"

(யாழ்ப்பாணம்)

''தமிழர் பிரச்னை முழுவதனையும் முழுமையான ஒரு சர்வகட்சி மகாநாட்டில் ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க முயற்சி செய்வதே முறையானதாகும்.''

இவ்வாறு பேராசிரியர் ஹூதர் ஜெயசிங்கமும், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியமும் ஜனதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''ஓர் உடனடியான இடைக்காலத் தீர்வுபற்றித் தங்களுக்கு எழுதிய மகஜர் கிடைத்துள்ளதாகவும், தாங்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுமென்றும் தங்கள் செயலாளர் கடந்த ஜூன் 21ம் திகதிய கடிதத்தில் எழுதியிருந்தார். அம்மகஜரைத் தாங்கள் படித்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

''நாட்டில் நடைபெறும்வன்செயல்களைத் தடுக்கும் வழிவகைகள்பற்றி ஆராய மற்றைய அரசியல் கட்சிகளையும் கலந்து தாங்கள் ஆலோசிக்க இருப்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளோம். இவ் விடயங்கள் எவ்வளவுதான் அவசரமாக இருந்தாலும் சில விடயங்சுளுக்கு மட்டும் பரிகாரம் தேடுவதிலும் பார்க்க தமிழர் பிரச்னைக்கு ஒரு சர்வ கட்சி மகாநாட்டில் முடிவெடுப்பதே சிறந்ததாகும்.

''இந்நாட்டை எதிர்நோக்கியுள்ள முழுப்பிரச்னைகளும் ஒன்ருக எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதனை விரும்புகின்றவர்கள் நாம் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்ரேம்.

''தமிழர் அரசியல் சரித்திரங்களை எடுத்துரைத்து ஓர் உடனடியான இடைக்காலத் தீர்வாக இலங்கை 5 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு சுயாட்சி வழங்கப்படவேண்டுமென்று பேராசிரியர் ஹூதர் ஜெயசிங்கமும், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியமும் ஜனதிபதிக்கு மகஜர் அனுப்பியிருந்தது தெரிந்ததே. (சூ)

# நஞ்சருந்தி விவசாயி தற்கொலை

(மட்டுவில்)

நோயின் கொடூரம் தாங்காமல் ஐந்துபிள்ளைகளின் தந்தையான விவசாயி ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் வவனிக்குளம் குடியேற்ற திட்டத்தில் நடைபெற்றுள்ளது. மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் ஆசைப்பிள்ளை என்ற 65 வயது விவசாயியே நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டவராவர்.

மாங்குளம் பொலிசார் ஸ்தலத்திற்குச்சென்று பார்வையிட்டு சாட்சிகளை ஆஜர் செய்தனர். வவனிக்குளம் குடியேற்ற திட்டப்பகுதி திடிர் மரண விசாரணை அதிகாரி திரு. கே.பரமானந்தம் ம்ரண விசாரணை நடத்தினுர்.

இறந்தவரின்மனைவி ஆசைப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை, மகள் விமலா மகன் சண்முகநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சாட்சியத்தின் போது இறந்தவர் இரத்த அமுக்கம் வாதம், ஆகிய நோய்களால் கஷ்டப்பட்டார் அடிக்கடி மயக்கம் வருவதுண்டு என்று தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி. தற்கொலைஎனத்தீர்ப்பளித்தார்

# "திறமைசாலிகள் கௌரவிக்கப்பட வேண்டும்"

(புலோலி)

''திறமைசாலிகளைக் கௌரவிக்க நாம் ஒருபோதும் தயங்கக்கூடாது. அப்போதே சமுதாயத்திற்கு தமது சிறந்த சேவைகளை ஆற்றுவதற்குத் திறமைசாலிகள் முன்வருவார்கள்''.

இவ்வாறு வதிரி நற்பணி மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. கண. எதிர்வீரசிங்கம் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சங்கங்களை அமைத்துவிட்டால்மட்டும் போதாது. அவற்றைச் சிறந்த முறையில் நடத்திச் சமுதாயமும் பயனடையக் கூடியதாகச் செயற்படவேண்டும். பாதிக்கப்படும் மக்களுக்கு நற்பணிசெய்து விமோசனமளிப்பதை இலட்சியமாகக் கொண்டே இம்மன்றம் உருவாக்கப்பட்டது.

''சமூகசேவையாளர்களையும், பொதுநல ஸ்தாபனங்களையும் இணைத்து எமது பணியைச் சிறந்த முறையில் மேற்கொள்ளவேண்டும். இளைஞர்கள் தமது சமுதாயத்திற்கு இத்தகைய மன்றங்கள் மூலமே உதவமுடியும்'' என்ருர்.

விசேட சேவை உத்தியோகத்தர் திரு. தி. வரதராசன் பேசுகையில், ''கஷ்டமுறும் மக்களுக்கு உதவும் இலட்சிய நோக்குடன் இம்மன்றம் உருவாக்கப்பட்டது பாராட்டிற்குரியது. இம்மன்றம் மூலம் சாதாரண மக்களும் பயனடையவேண்டும். சகோதரத்துவத்தையும், சேவை மனப்பான்மையையும் வளர்ப்பதன் மூலமே உண்மையான பொதுநல சேவையை நாம்பெறமுடியும்'' என்று கூறினுர்.

திரு. ச. இரத்தினசேகரன், திரு. மா. லட்சுமிகாந்தன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.


புதிய லக்ஸ்பிறே 500



100 கிராம் மேலதிகம்.

500 கிராமிற்கான விலையோ 26/00 சதம் மட்டுமே. செறிவும், செழுமையும் மிகுந்தவாய்ப்பாடு III புதிய லக்ஸ்பிறே (26% பாற் கொழுப்பு நிறைந்தது)

- ★ ஈரலிப்பு, துர்நாற்றம், பக்ரிறியாத்தாக்கம் என்வற்றைத்தடை செய்யத்தக்க முப்படைகளான பையில் அடைக்கப்பட்டு வெளிவருகிறது.
- ★ நைதரசன் வாயுவுடன் சேர்ந்து அடைக்கப்படுவதால் நீண்ட காலச் சேமிப்பிற்கு உகந்தது.

தீவு பூராவும் தாராளமாகக் கிடைக்கிறது.

எடை போட்டுப் பார்க்க சில உண்மைகள்.

சந்தைப்படுத்துவோர்
லங்கா மில்க் .. பூட்ஸ் (சீ.டப்ளியூ.ஈ) லிமிட்டெட்.
வெலிசர, ருகம, இலங்கை.

ZENITH

**சாந்தி** யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
**தியாகம்**
(கலர்)



**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
என். டி. ராமராவ்
அஞ்சலிதேவி
**பாலநாகம்மா**



28-7-83 வரை மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
**வாழ்வே மாயம்**
(ஈஸ்மன்கலர்)


## இடமாற்றம்

(சுண்டிக்குளி)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இலங்கைப் பிரதிநிதியான அதிமேற்றிராணியார் அதி. வந். நிக்கலோ ரொட்டுண்ண இம்மாத முடிவில் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

கடந்த ஆறு வருடங்களாக இங்கு கடமைபுரிந்த இவர், இங்கு வருமுன் ஆபிரிக்க நாடுகளில் பாப்பரசரின் பிரதிநிதியாக கடமை புரிந்தார்.


**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
(ஈஸ்ட்மன் கலர்)


# திருமணப்பதிவில் விருப்பமில்லை

# இளம்பெண் தற்கொலை

(மட்டுவில்)

விருப்பமில்லாத ஒருவரைத் திருமணப்பதிவு செய்ததைத் தொடர்ந்து மணப்பெண் சில மணி நேரத்தில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். மகளின் பிரிவாற்றாத தந்தை மகளிறந்து சிறிது நேரத்தில் மகளின் வழியைப் பின்பற்றினார்.

இப்பரிதாப சம்பவம் சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

அருந்தவம் என்ற 20 வயது பெண்ணே திருமணப்பதிவில் விருப்பமில்லாமையால் இரவு திருமணப்பதிவு நடந்ததும் காலையில் பிணமானார். இவரின் மரண விசாரணையை சாவகச்சேரிப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் நடத்தினார். தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

பளையில் வசித்து வந்த இப்பெண்ணின் தந்தை சின்னத்தம்பி விஞசித்தம்பி (வயது 55) மகள் தற்கொலை செய்து கொண்டதும் தானும் நச்சு திராவகம் அருந்தி அன்று காலையிலேயே தற்கொலை செய்து கொண்டார்.

இவருடைய மரண விசாரணையையும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைத்து மரண விசாரணை அதிகாரி திரு.என். தர்மேந்திரன் நடத்தினார். சாவகச்சேரிப் பகுதி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.சண்முநோதன் பிரேத பரிசோதனை நடத்தினார். வடிவேலு, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் சாட்சியங்களையும் பதிவு செய்து கொண்ட மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.


**ராஜா** (யாழ்நகர்)
படம் பார்ப்பவர்களின் வசதியை முன்னிட்டு காட்சி நேரங்கள் பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்


## தற்கொலை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தையொருவர், மைத்துனர் முறையான ஒருவரும் தன்னை அடித்துத் துன்புறுத்தியதால் ஆத்திரம் தாங்காது கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். ஜயந்தி நகரைச் சேர்ந்த சோமசுந்தரம் தர்மகுலசிங்கம்(33வயது) என்பவரே தற்கொலை செய்தவராவர்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் ஜனுப் ஆர். ரி. பரீத் ஆஜர்செய்தார். பிரேத பரிசோதனையை பதில் சட்ட வைத்திய அதிகாரி திருமதி ஜி: கந்தசாமி மேற்கொண்டார்.

சாட்சியங்களைத் தொடர்ந்து தற்கொலை மரணம் எனதீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

## நடப்பு வருட நிர்வாகிகள்

(புலோலி)

வதிரி நற்பணி மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் வதிரி புனித மஹாலில் நடைபெற்றது. கீழ்க்காண்போர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் சீ. சாந்தனுதன், தலைவர்: கண. எதிர்வீரசிங்கம், பொதுச் செயலாளர்: ச. இரத்தினசேகரன், பொருளாளர்: சி. மகேந்திரன், கணக்குப் பரிசோதகர்கள்: மா. லட்சுமிகாந்தன், சீ. சித்தரஞ்சன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் த. தவராசா, சு. புஸ்பராசா, எஸ். குணசேகரன், இரா. ஸ்ரீதரன், அ. வசந்தராசன்.

## ஆலய பரிபாலன சபை

(சரவணை)

சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலய பரிபாலன சபையின் ஆண்டுக்கூட்டம் திரு வி; கேதாரநாதன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாசிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ. ச. சிவம், காரியதரிசி: த. தெட்சணுமூர்த்தி, தனுதிகாரி: கு.கணேசலிங்கம்.

காரிய நிர்வாகசபை அங்கத்தவர்களாக திருவாளர்கள் அ. பேரம்பலம், செ. பூதத்தம்பி, ந. உமாபதிசிவம், பொ. நாகராசா, ஆ. நல்லையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)


**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-30
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த்— **காளி**



**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**



**லிடோ** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**



**ராணி** தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
**சகல கலா வல்லவன்**



**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா **வாயாடி**
18-7-83 முதல் M. G. R., மஞ்சுளா, லதா நடித்த
**உலகம் சுற்றும் வாலிபன்**
21-7-83 முதல் சிவாஜி, K. R. விஜயா, முத்துராமன் நடித்த
**நெஞ்சிருக்கும் வரை** (புதிய பிரதி)



**ரீகல்-Regal** தினசரி 10-30, 2-00, 4-30
7-15 P. M.




இன்னும்
8 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....
சஜும் சூரி...
நடிக்கும்
"கேர்ல்
(f)ப்ரம்
இந்தியா"
GIRL
FROM
INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயது வந்தவர்கள்
மட்டும்



# விற்பனைக்கு

**யாழ்ப்பாணம்**
*வீடு 2 பரப்புக்காணியுடன் (ஸ்ரான்லி ரோட்)
*வீடு 1 பரப்புக்காணியுடன் (4-ம் குறுக்குத்தெரு)
*கடை ¼ பரப்பு கே. கே. எஸ். ரோட்.
*4 பரப்புக் காணி (கொய்யாத் தோட்டம்)
*5 பரப்புக் காணி (ஆஸ்பத்திரி வீதி)
*90 பரப்புக் காணி (கொழும்புத்துறை)
*9 பரப்புக் காணி (ஸ்ரான்லி வீதி)
*6 பரப்புக் காணி (ஏ. வி. ரோட், அரியாலை)
*2·5 பரப்புக் காணி (றக்கா லேன், கண்டிக்குளி)

**திருநெல்வேலி**
*12 ப்ரப்புக் காணி (கலாசாலை வீதி)

**கோண்டாவில்**
*2 பரப்புக் காணி (நவரத்தினசாமி வீதி)

**நல்லூர்**
*வீடு 2¾ பரப்புக்காணி யுடன் (செங்குந்தா வீதி)
*வீடு 4½ பரப்புக் காணி யுடன் (செட்டித் தெரு)
*1 பரப்புக்காணி (குமாரவீதி)
*1·5 பரப்புக்காணி (குமாரவீதி)

**தாவடி**
*10½ பரப்பு(சுதுமலை ரோட்)
*12 பரப்பு (சுதுமலை ரோட்)

**உரும்பிராய்**
*4 பரப்புக்காணி (திருவீதி)

**ஊரெழு**
*16 பரப்புக்காணி (ஊரெழு நீர்வேலிரோட்)

**சண்டிலிப்பாய்**
*10 பரப்புக்காணி (கல்வளைப் பிள்ளையார் கோவிலடி)

**உடுவில்**
*9½ பரப்புக்காணி (மானிப்பாய் உடுவில் வீதி)
*4 பரப்புக்காணி (மானிப்பாய் உடுவில் வீதி)

**சிறுப்பிட்டி**
*3 பரப்புக்காணி (பருத்தித்துறை வீதி)

**புன்னாலைக்கட்டுவன்**
*11¼ பரப்புக்காணி (ஈவினை ரோட்)

**சில்லாலை**
*புது வீடு 10 பரப்புக்காணி யுடன்

**கைதடி**
*9 பரப்புக்காணி (3 பரப்புத் துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது)
*3 பரப்புக்காணி (மானிப்பாய் வீதி)

**மிருசுவில்**
*11½ பரப்புக்காணி (கண்டி வீதி)
*40 பரப்புக்காணி (தவசிக்குளம்)
*29 பரப்புக்காணி (பழையவாய்க்கால் வீதி)

**பளை**
*30 ஏக்கர் தோட்டம்

**ஓமந்தை**
*5 ஏக்கர் (கண்டிவீதி) (கடைகள் கட்டக்கூடிய நிலம)

**இருபாலை**
*வீடு 2¼ பரப்புக் காணி யுடன் (பருத்தித்துறை வீதி)

**கோப்பாய்**
*வீடு 3 பரப்புக் காணி யுடன் (பூதர் மடம்)

**ஏழாலை**
*வீடு 2½ பரப்புக் காணி யுடன்

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்.,**
(காணிப் பிரிவு)
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

### ★ பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

# உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

## மாணவர் கோரிக்கைக்கு உபவேந்தர் இணக்கம்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளுக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பி. எல். பண்டிதரத்ன நிபந்தனையின்றி இணக்கம் தெரிவித்ததை யடுத்து அங்கு நடைபெற்றுவந்த உண்ணாவிரதப் போராட்டம் உடனடியாகக் கைவிடப்பட்டது.

மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்ல முடிவுசெய்துள்ளனர். பணயமாக வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் டயஸையும் மாணவர்கள் விடுவித்துள்ளனர்.

---

### கோணேசர் ஆலய கணக்குப்பிள்ளை படுகொலை:

# அடையாள அணிவகுப்பு நடாத்த நீதிபதி உத்தரவு

(திருகோணமலை)

திருமலையில் மலையகத்தைச் சேர்ந்த நால்வர் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருமலை பறையன்குளம் என்ற பகுதியில் மலையகத்திலிருந்து வந்து குடியேறிய சின்னையா, வடிவேல், வள்ளியம்மை, பூவாயி ஆகியோர் கொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் சந்தேக நபர்களான பியசேன, பியசிறி ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

திருமலை பதில் நீதிபதி எம். கே. செல்வராசா முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை இம்மாதம் 28ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

---

# திருமலையில் நால்வர் கொலை 2சந்தேகநபர்கள் ரிமாண்டில்

(திருகோணமலை)

கோணேஸ்வரர் கோவில் கணக்கப்பிள்ளை பி. செல்வராசா கொலைசெய்யப்பட்டது தொடர்பாக அடையாள அணிவகுப்பு நடத்துமாறு திருமலை நீதிபதி சரத் டீ. ஆப்று பொலிஸாரைபணித்துள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக கைதான சந்தேக நபர்களான சுனில், விமலசேன, அபரசேன ஆகியோரை ரிமாண்டில் வைக்குமாறு நீதிபதி பணித்துள்ளார். (க)

---

## கூட்டணி தலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச்சென்றனர். விசாரணையின் பின் 4இளைஞரையும் செல்வதற்கு அனுமதித்தனர்.

கூட்டணி காரியாலயத்தை இராணுவத்தினர் சோதனையிட்ட போது நல்லூர் எம்'பி. திரு. எம். சிவசிதம்பரம் அங்கு இருக்கவில்லை. என்று கூறப்படுகிறது. (மா-க)

---

## பல உள்ளங்களை...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்ந்து மக்களை உயர்த்தியவர். பலரது உள்ளங்களைத் தூய்மைப்படுத்திவர். இவர் கால்பட்ட இடமெல்லாம் சைவப்பண்புகள் மிளிர்ந்தன. சைவசயமத்திற்கும் கடவுள் நெறிக்கும் காட்டும் அன்பும் மரியாதையும் அதிகமாயின.

பே. சந்திரசேகரம்

---

# கிணற்றுள்கிடந்த சடலத்தின் தலையில்துப்பாக்கிக்குண்டுகள்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை-வடக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வயல் கிணறு ஒன்றிலிருந்துமீட்கப்பட்ட இனந்தெரியாத இளைஞரின் சடலம் பிரேதபரிசோதனை செய்யப்பட்டபோது தலையிலிருந்து 3 நீளக் குண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இக்குண்டுகள் தலையின் மூளைக்குள் கிடந்தன.

துப்பாக்கிச் சூட்டினால் இம்மரணம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வல்லிபுரக் கோவிலுக்குச் சுமார் அரைமைல் தூரத்தில் வயல்வெளியில் பாழடைந்த கிணற்றில் சடலம் ஒன்றுகிடப்பதாகப் பருத்தித்துறைப் பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதைத்தொடர்ந்து, பொலிசாரால் சடலம் மீட்கப்பட்டது. 30-40 வயதுக்குட்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. தலையில் இத்துப்பாக்கிச் சூட்டுக்காயம் காணப்பட்டது.

உள்ளே பெனியனும், நீல நிறச்சேர்ட்டும், நீல நிறப் பிஜாமா சாரமும் சடலத்தில் காணப்பட்டது.

பருத்தித்துறை நீதவான் கே. கணபதிப்பிள்ளை சடலம் கிடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைத்துச் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார்.

இச்சடலத்தை யாரும் அடையாளம் காட்டாததால் அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார். (மா)

---

## கிளிநெச்சி....

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அப்போது ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராயிருந்த திரு. நாயகம் சிற்றம்பலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டியின் அவசியம்பற்றி வலியுறுத்தியிருந்தார்.

இம்முயற்சியின் பயனாகப் பிரஸ்தாப ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று கிடைக்கவுள்ளது.

இதுசம்பந்தமான அறிவித்தலொன்றை திரு. நாயகம் சிற்றம்பலத்திற்கு சுகாதார அமைச்சு இப்போது அனுப்பிவைத்துள்ளது. (அ)

---

## முருங்கன் தபாலக கண்ணாடிகள் உடைக்கப்பட்டது

(மன்னார்)

முருங்கன் தபால் நிலையத்தின் முன்பக்க கண்ணாடிகள் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் கற்களால் வீசிஉடைக்கப்பட்டது.

இதுதொடர்பாக முருங்கன் பொலிசார் விசாரணை மேற்கொண்டனர்.

இராணுவத்தினர் இது தொடர்பாகஅப்பகுதியிலுள்ள சில இளைஞர்களை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர். சிலர் விடுதலை செய்யப்பட்டனர். மற்றும் சிலர் தடுத்து வைக்கப்பட்டனர்.

---

## நேற்று இப்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோண்டாவில் கிழக்கின் ஒரு பகுதி இராணுவத்தினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இவர்கள், 18க்கும் 35 வயதுக்குமிடைப்பட்டவர்களை பாற்பண்ணையின் முன்பு அடையாள அட்டையுடன் வந்துசேரும்படி ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

பால் கொடுக்கச் சென்றவர்களின் பால் வெளியே ஊற்றப்பட்டதாகவும், மோட்டார் சைக்கிளில் சென்றவர்களின் தொப்பிகள் அடித்து நொருக்கப்பட்டும் சிலர் தாக்கப்பட்டதாகவும்கூறப்படுகிறது. குறிப்பிட்ட சிலரின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

---

## பருத்தித்துறையிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமையிலிருந்தவரான கனகசபை செல்வேந்திரன் என்பவர் பருத்தித்துறைப் பொலிசில் செய்த புகாரில், இரவு 2மணியளவில் கராஜ் பக்கமிருந்து பெரிய சத்தம் கேட்டதாகவும் தாம் ஓடிச்சென்று பார்த்தபோது ஜீப் எரிந்துகொண்டிருந்ததாகவும், நெருப்பை அணைக்கத் தாம் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

---

### வண்ணை

## வைத்தீஸ்வர பழைய மாணவர் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை உள்அக விளையாட்டுக்களும், கலந்துரையாடலும், இளைப்பாறிய அதிபர், ஆசிரியர்களை கௌரவித்தலும் நடைபெறும். பிற்பகல் புது வருட உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும். (மா)

---

## இன்று நடக்கும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ப. நோ. கூ. சங்க உணவுப் பொருள் விநியோகம் பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

யாழ். ப. நோ. கூ. சங்க பொதுச் சபை உறுப்பினரும், ஊழியரும் கூட்டுறவாளரும், பாவனையாளர் சங்க பிரதிநிதிகளும் இக்கூட்டத்திற்குஅழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னைநாள் நெறியாளர்களான திருவாளர்கள் தம்பு கந்தையா, பி. வி. நவரத்தினம், எஸ். சிவசுப்பிரமணியம். ப. முத்துக்குமாரசாமி ஆகியோர் இக்கூட்டத்திற்கான ஏற்பாட்டை செய்துள்ளனர். (அ)

---

# இந்திய வம்சாவழியினர் பிரச்னைக்கு விரைவில் தீர்வு!

### — ஜனதிபதி ஜே. ஆர்.

[கொழும்பு]

இலங்கையில் உள்ள நாடற்ற இந்திய வம்சாவழியினரின் பிரச்னைகளை விரைவில் தீர்த்து வைக்கவிருப்பதாக ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு தெரிவித்திருக்கின்றூர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமிய கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் இந்திய வம்சாவளிப்பிரதிநிதிகளுக்குத் தலைமைதாங்கி ஜனதிபதியைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடற்ற இந்திய வம்சாவழியினர் பற்றிய சகல தகவல்களையும் திரட்டி வருவதாகவும், விரைவில் இலங்கையில் உள்ள இந்திய மக்களின் சகல பிரச்னைகளும் விரைவில்தீர்த்து வைக்கப்படுமென்றும் அவர் உறுதியளித்தார். (சூ)

---

## ஐ. தே. க. வின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாண மக்கள் பாரபட்சமற்ற முறையில் அரசினால் நடாத்தப்படுகிறூர்கள். வடபகுதியில் எமது அரசைப் பற்றி எவ்வித அபிப்பிராயத்தை மக்கள் கொண்டிருந்தாலும், அரசு தார்மீக சமுதாயமொன்றைக் கட்டிஎழுப்பும் பணிக்கு அமைய, நீதியுடன் நடந்து கொள்ளும்.

யாழ்ப்பாணத்தில் உணவு, எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

''பயங்கரவாதிகளை அப்பகுதி மக்கள் காட்டிக்கொடுக்காததினலேயே இவ்வித தட்டுப்பாடு அங்கு ஏற்பட்டது. ரயில் பெட்டிகள் பயங்கரவாதிகளால் எரிக்கப்பட்டதினல், இத்தட்டுப்பாடு ஏற்பட்டது. விமானத்தில் எண்ணெய் அனுப்பிவைக்கமுடியாது. எப்படியாயினும், இவற்றை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

---

## கூட்டணி கலந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி எம்.பி.திரு. வி.என். நவரத்தினம் கூட்டத்துக்கு வராததுகுறித்து எவ்வித தகவலும் கொடுக்கவில்லை.

நேற்று நல்லூர் எம். பி. இல்லத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக்குழு கூடி ஜனதிபதி கூட்டியுள்ள வட்டமேசை மகாநாட்டு அழைப்புப்பற்றி ஆராய்ந்தது.

யாழ். மாவட்ட தொகுதி எம். பிக்களில் ஏழுபேர் கூடி ஆராய்ந்து எடுத்த முடிவை கடிதமாக திரு. அமிர்தலிங்கம் அனுப்பிவைத்திருந்தார்.

ஜனதிபதிக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் விபரம் வருமாறு:-

''இலங்கையின்பயங்கரவாத நடவடிக்கைகள்பற்றி கலந்துரையாடி அதனை ஒழிப்பது பற்றி ஒரு இணைந்த நடவடிக்கையை எடுப்பதற்கான கூட்டம் சம்பந்தமாக நீங்கள் அனுப்பிய 13-7-83 கடிதம் கிடைத்தது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்ற ஆயுதப்படைகளினதும் இளைஞர்கள் ஒரு பிரிவினரதும் வன்செயல் நடவடிக்கைகள் இத்தீவில்பிடித்துள்ள அரசியல் வியாதியின் ஒரு அறிகுறியாகும்.

முழுப்பிரச்னைகளுக்கும் பதிலாக 1977ம் ஆண்டு ஐ. தே. கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒப்புக்கொண்டதன் பிரகாரம் மிக ஆழமான மனக்குறைகளின் விளைவாக இருக்கும் ஒரு அம்சத்தினைபற்றி மாத்திரம் அதனைத் தனிமைப்படுத்தி கலந்துரையாட முற்படுவது எனக்கு ஆச்சரியமளிக்கிறது.

முழுப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண முயற்சி எடுக்கப்படாமை கவலைக்குரியதாகும். இந்தச் சூழ்நிலையில் நீங்கள் கூட்டும் மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளமாட்டாது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.''

---

## கூட்டணித் தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் கூறியதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் வீதிக்குவீதி இராணுவத்தை குவிப்பதன் மூலம் தமிழ் மக்கள் பிரச்னையை தீர்க்கவோ அன்றி இளைஞர்கள் கொந்தளிப்பை அடக்கவோ முடியாதென்றும் அப்பிரச்னைகளை உரிய முறையில் அணுகுவதன் மூலம் தீர்க்கப்படவேண்டும். என்றும் கூறினர். (க)

---

## யாழ். ஆஸ்பத்திரி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெளியில் பிதுங்கி கோரமான நிலையிலிருந்தது.

அடுத்த இளைஞரின் சடலத்தில் வெள்ளை-மண்ணிறக் கலரில் கோடுபோட்ட சேட்டும், மண்ணிறக் கால்சட்டையும் இருந்தது. தலையிலும், வலது கன்னத்திலும் காயங்கள் இருந்தன.

இரு இளைஞர்களது சடலங்களும் சுமார் 5 அடி 10 அங்குல உயரமுள்ளனவாம்.

இரகசியப் பொலிசார் இரு இளைஞர்களின் சடலங்களையும் புகைப்படம் எடுத்தனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை இரு சடலங்களையும் எவரும் அடையாளம் காட்டவில்லை என்றும், விசாரணை எதும் நடைபெறவில்லை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

---

## இளைஞர் சுடப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவவீரர்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

அங்கு அவர்கள் ரோந்து சுற்றிவந்தபோது அவர்களின் வாகனம் மீது பயங்கரவாதிகளால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலுக்கு பதிலளித்து அவர்களும் தாக்கத்தொடங்கினர். அப்போது மூவர் அருகிலிருந்த வெளியொன்றினூடாக பாய்ந்து தப்பிச்செல்ல முற்பட்டனர்.

ஆயினும் இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டதையடுத்து அம்மூவரில் இருவர் கொல்லப்பட்டனர். தப்பிச் சென்றுள்ளார்.

இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் சோதனையிட்ட போதே மேற்குறிப்பிட்ட பயங்கர ஆயுதங்கள் சீருடைகள் என்பன கைப்பற்றப்பட்டன.'' என்றூர்.

தப்பிச்சென்றவரின் நடமாட்டம் யாழ்ப்பாண பகுதியில் காணப்படுவதாக தமக்கு தகவல் எட்டியுள்ளதாகவும் அவர்தெரிவித்தார். (கி)

---

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu. Telephone: 22389—24126.